இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 7 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 31 – புதன்கிழமை 16 ஆகஸ்ட் 2023 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 7 : Thiruvalluvar Year - 2054 - Aadi 31 - Wednesday 16 August 2023 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


### விருப்பத்திற்கு மாறாக திணிக்கப்படும் ‘நீட்’ தேர்வு தொடர்பாக – மாணவ சமுதாயத்திற்கு

# உயிரை மாய்த்துக்கொள்ளும் சிந்தனை ஒருபோதும் கூடாது!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று (15.8.2023) சென்னை, தலைமைச் செயலகக் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

**சென்னை, ஆக. 16–**

**‘விருப்பத்திற்கு மாறாக திணிக்கப்படும் ‘நீட்’ தேர்வு தொடர்பாக, மாணவ சமுதாயத்திற்கு உயிரை மாய்த்துக் கொள்ளும் சிந்தனை ஒருபோதும் கூடாது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

‘நீட்’ தேர்வு மையத்தில் பயின்று வந்த குரோம்பேட்டையைச் சேர்ந்த மாணவர் ஜெகதீஸ்வரன் தற்கொலை செய்து கொண்டு உயிரை மாய்த்துள்ளதை அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். அவரது குடும்பத்துக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று நினைத்துக் கொண்டிருந்த நிலையில், ஜெகதீஸ்வரனின் தந்தை செல்வசேகரும் மறுநாளில் தற்கொலை செய்து கொண்டுள்ளார். ஜெகதீஸ்வரன் குடும்ப த்துக்கும், உறவினார்க்கும், நண்பர்களுக்கும் என்ன சொல்லி ஆறுதல் கூறுவது எனத் தெரியவில்லை.

நன்றாகப் படிக்கும் மகன், மருத்துவர் ஆவான் என்றுதான் அவரைப் பெற்ற பெற்றோர் நினைத்திருப்பார்கள். ஆனால் ‘நீட்’ தேர்வு எனும் பலிபீடத்தில் பலியானவர்கள் பட்டியலில் ஜெகதீஸ்வரன் சேர்ந்துவிட்டது மிகக் கொடூரமான நிகழ்வாகும்.

**ஜெகதீஸ்வரன் போன்ற எத்தனை உயிர்கள் பலியானாலும் ஆளுநர் ஆர்.என்.ரவி போன்றவர்களின் இதயம் கரையப் போவதில்லை. இப்படிப்பட்ட கல்மனசுக்காரர்களின் காலத்தில் மனித உயிர்களுக்கு மதிப்பு இல்லை. இன்னும் சில மாதங்களில் நாங்கள் ஏற்படுத்த நினைக்கும் அரசியல் மாற்றம் நடக்கும் போது நீட் தடுப்புச் சுவர் பொலபொலவென உதிர்ந்து விழும். “கையெழுத்து போடமாட்டேன்” என்பவர்கள் எல்லாம் காணாமல் போய்விடுவார்கள்.**

எந்தச் சூழலிலும் உயிரை மாய்த்துக் கொள்ளும் முடிவை எந்த மாணவரும், எப்போதும் எடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்கள் உயர்வுக்குத் தடைக்கல்லாக இருக்கும் ‘நீட்’ தேர்வு முறையை நிச்சயம் நீக்க முடியும். அதற்கான சட்ட ரீதியான முயற்சியில்தான் தமிழ்நாடு அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

**ஆளுநர் ரவியின் மோசமான எண்ணம்!**

ஒரு முறையல்ல, இரண்டு முறை ‘நீட்’ விலக்கு மசோதாவை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்தோம். முதலில் அனுப்பி வைக்கும் போது காலம் கடத்தினார். பல்வேறு நெருக்கடிக்கு மத்தியில் திருப்பி அனுப்பினார். மீண்டும் சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பினோம். இரண்டாவது முறை அனுப்பி வைத்தால் ஒப்புதல் தந்தாக வேண்டும். ஆனால் அதனை அவர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளார். எங்காவது போய் அந்த மசோதா கிடப்பில் போடப்பட வேண்டும் என்பதுதான் ஆளுநர் ரவியின் மோசமான எண்ணம் ஆகும்.

‘நீட்’ தேர்வு என்பது தனியார் பயிற்சி நிறுவனங்களில் இலட்சக்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### 77–வது விடுதலை நாள்: ஆளுநர் மாளிகையில் நடைபெறும்

# தேநீர் விருந்தினைப் புறக்கணிக்கிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஆக. 16 -**

**“77-வது விடுதலை தினத்தையொட்டி ஆளுநர் மாளிகையில் நடைபெறும் தேநீர் விருந்தினைப் புறக்கணிக்கிறோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

குமரிக் கடல் முதல் இமயப் பெருமலை வரை வாழும் மக்கள் ஒன்றுபட்ட சிந்தனையுடன் போராடிப் பெற்றதே இந்திய நாட்டின் விடுதலை ஆகும். அப்போது வாழ்ந்த முப்பது கோடி மக்களும் நாட்டு விடுதலைக்காகப் போராடியதன் விளைவே 1947 ஆகஸ்ட் 15 அன்று கிடைத்த வெற்றிச் செய்தி. இன்று, நாம் இந்தியத் திருநாட்டின் 77ஆவது விடுதலை நாளைக் கொண்டாடுகிறோம் என்றால், இதற்காகத் தியாகம் செய்த அனைவரது போராட்டத்துக்கும் தலை வணக்கம் செலுத்தவே! போராடிப் பெற்ற விடுதலையை எந்நாளும், எச்சூழலிலும் போற்றிப் பாதுகாப்பதே அவர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி ஆகும்.

விடுதலை அடைவதற்கு முன்பே, ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று அனைவரையும் பாடச் சொன்னார் மகாகவி பாரதியார். விடுதலை பெற்ற இந்தியாவானது, அனைவருக்கும் சமவாய்ப்பு அளிக்கும் இந்தியாவாகத்தான் இருக்கும் என்று அந்தத் தமிழ்க் கவி கனவு கண்டார். நாட்டின் 77 ஆவது விடுதலை நாளைக் கொண்டாடும் நேரத்தில், சில நாட்களுக்கு முன் சென்னையைச் சேர்ந்த 17 வயது மாணவர் ஜெகதீஸ்வரன் மற்றும் அவரது தந்தை செல்வசேகர் ஆகிய இருவரும் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்ட செய்தி, நம் முன்னோர் தம் இன்னுயிர் ஈந்து நமக்களித்த விடுதலை, எல்லோருக்குமானதா அல்லது வசதி படைத்த வெகு சிலருக்கானதா? என்ற கேள்வியை எழுப்புகிறது. அரியலூர் அனிதாவில் தொடங்கி இதுவரை விலை மதிப்பில்லா பல மாணவச் செல்வங்களின் உயிர்களை, நீட் தேர்வு முறை காரணமாக தமிழ்நாட்டில் நாம் இழந்திருக்கிறோம். இவர்களின் மரணங்கள் எழுப்பும் தார்மீகக் கேள்விகள், நமது மனச்சாட்சியை உலுக்கி வருகிறது.

**இரக்கமற்ற வகையில் பேசி வருகிறார் ஆளுநர்!**

ஆனால், ஏழை எளிய, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர், அவர்தம் பெற்றோரின் கனவுகளை, எதிர்கால நல்வாய்ப்புகளை இழந்து வரும் நிலையை உணர மறுத்து, தமிழ்நாட்டு ஆளுநர் இரக்கமற்ற வகையில் பேசி வருகிறார். நீட் தேர்வு விலக்குக்கு நான் ஒருபோதும் அனுமதி அளிக்க மாட்டேன்.

**குடியரசுத் தலைவருக்கு கடிதம்!**

அந்த அதிகாரம் எனக்கு இருந்தால் நிச்சயம் நீட் விலக்கு மசோதாவில் கையெழுத்திட மாட்டேன் என்று பொது வெளியில் ஆளுநர் ஆர்.என்.ரவி பேசியிருப்பது தமிழ்நாட்டு மாணவர்களையும்,

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

### தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்ட

# ‘நீட்’ மசோதாவுக்கு விரைவில் ஒப்புதல் அளித்திடுக!

## குடியரசுத் தலைவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஆக.16–**

**தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்ட நீட் தொடர்பான மசோதாவுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கோரி, இந்தியக் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கை சட்ட முன்வடிவு, 2021க்கு ஒப்புதல் அளிப்பதில் தாமதம் ஏற்படுவதால் ஏற்படும் துரதிருஷ்டவசமான விளைவுகள் குறித்து இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, நீட் தேர்வு விலக்கு தொடர்பான மசோதாவிற்கு விரைவில் ஒப்புதல் வழங்கிடக் கோரி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.8.2023) கடிதம் எழுதியுள்ளார்.

**ஏழை–எளிய மாணவர்களுக்கு எதிராக உள்ள ‘நீட்’ தேர்வு!**

அக்கடிதத்தில், மருத்துவப் படிப்புகளில் சேருவதற்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வை (NEET) தமிழ்நாடு அரசு தொடர்ந்து எதிர்த்து வருவதாகவும், நீட் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையிலான மருத்துவச் சேர்க்கை, நகர்ப்புற மாணவர்களுக்கும், அதிக கட்டணம் செலுத்தி பயிற்சி பெறக் கூடிய மாணவர்களுக்குமே சாதகமாக உள்ளது என்றும், அடிப்படையிலேயே ஏழை எளிய மாணவர்களுக்கு எதிரானதாக இந்தத் தேர்வு முறை உள்ளது என்றும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், நீட் போன்ற நுழைவுத் தேர்வின் அடிப்படையில் சேர்க்கை நடைபெறுவதை விட, பிளஸ் 2 மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே சேர்க்கை நடைபெற வேண்டுமென்றும், நுழைவுத் தேர்வு முறை மாணவர்களுக்குத் தேவையற்ற கூடுதல் சுமையை ஏற்படுத்தும் என்பது தமிழ்நாட்டின் கருத்தாக உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

**நீதியரசர் ஏ.கே.ராஜன் குழு தந்த அறிக்கையின்படி பேரவையில் தீர்மானம்!**

நீட் அடிப்படையிலான மாணவர் சேர்க்கை செயல்முறை, ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கு நீட் தேர்வினால் ஏற்படும் பாதகமான விளைவுகள் ஆகியவை குறித்து ஆராய்ந்திட, உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஏ.கே.ராஜன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு, அக்குழு விரிவான ஆய்வை

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

### சென்னை – கோட்டை கொத்தளத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தேசியக் கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்!

## முப்படையினர் - காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார்!

சென்னை, ஆக. 16–

77வது சுதந்திர தினத்தையொட்டி நேற்று (15.08.2023) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடி ஏற்றி வைத்து சிறப்புரை நிகழ்த்தினார். இதைத்தொடர்ந்து சாதனையாளர்களுக்கு விருது வழங்கி கவுரவித்தார்.

நாட்டின் 77வது சுதந்திர தினம் நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. சென்னை கோட்டையில் காலை 9 மணிக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேசியக் கொடியேற்றி உரை நிகழ்த்தினார்.

விழா மேடையில், ‘தகைசால் தமிழர்’ விருதை திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். டாக்டர் அப்துல்கலாம் விருது, கல்பனா சாவ்லா விருது, முதலமைச்சரின் நல் ஆளுமை விருது, மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மிகச் சிறந்த சேவை புரிந்தோருக்கான தமிழ்நாடு அரசு விருதுகள், மகளிர் நலனுக்காக சிறப்பாக தொண்டாற்றிய தொண்டு நிறுவனம் மற்றும் சமூக பணியாளருக்கான விருதுகள், சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதலமைச்சர் விருதுகள், முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள் உள்ளிட்ட விருதுகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழா மேடையில் வழங்கி சிறப்பித்தார்.

முன்னதாக காலை 8.45 மணிக்கு கோட்டை கொத்தளத்திற்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா வரவேற்றார். இதைத்தொடர்ந்து முதலமைச்சருக்கு முப்படை அதிகாரிகளை தலைமைச் செயலாளர் அறிமுகம் செய்து வைத்தார்.

**கொடியேற்றும் உரிமையைப் பெற்றுத் தந்த கலைஞர்!**

இதன்பின்பு முப்படையினர் மற்றும் காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்றுக்கொண்டார். பின்னர் கோட்டை கொத்தளத்தின் மேல் உள்ள கொடியேற்றும். இடத்துக்கு முதலமைச்சர் சென்று தேசியக் கொடியை ஏற்றி வைத்து வணக்கம் செலுத்தினார்.

இதன்பின்பு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மக்களுக்கு சுதந்திர தின உரை நிகழ்த்தினார்.

1974–ஆம் ஆண்டு அப்போது முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாநில முதல்வர்கள் சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை ஏற்றி வைக்கும் உரிமையை அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவர்களிடம் வலியுறுத்தி பெற்றுத் தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 16-08-2023

# சிலப்பதிகாரமும் நிர்மலா சீதாராமனும்

நாடாளுமன்ற மக்களவை தி.மு.க. குழு துணைத் தலைவர் கனிமொழி அவர்கள், நாடாளுமன்றத்தில் பேசும்போது சிலப்பதிகாரத்தைச் சுட்டிக் காட்டினார். **“நாடாளுமன்றத்தில் சோழர்களின் செங்கோலை வைக்கிறீர்களே! உங்களுக்கு பாண்டியரின் செங்கோல் பற்றித் தெரியுமா? சாமான்யரின் குரலைச் செவிமடுக்காத காரணத்தால் அந்தச் செங்கோலுக்கு என்ன கதி ஏற்பட்டது என்பது தெரியுமா? தெரிந்து கொள்ள சிலப்பதிகாரத்தைப் படியுங்கள்”** என்று சொன்னார். உடனடியாக அன்றைய தினமே சிலப்பதிகாரத்தைப் படித்து விட்டார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். தவறுதலாக!

எதற்காக சிலப்பதிகாரத்தை கனிமொழி படிக்கச் சொன்னாரோ அதற்காகப் படித்திருக்க வேண்டும்.

**‘அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்’** – என்பது சிலம்பின் உள்ளடக்கம். அரசியலில் தவறு செய்தவர்களை அந்த அறமே பகையாக மாறி எதிர்வினையாற்றும் என்பதுதான் இளங்கோவடிகள் வடித்த தமிழிய அறம் ஆகும். இதற்காகத்தான் சிலப்பதிகாரத்தைப் படிக்க வேண்டும் என்கிறோம்.

குடிமக்கள் தலையில் தாங்கமுடியாத வரியைச் சுமத்தும் அரசு வாழ முடியாது, அத்தகைய அரசு குடிமக்களால் கவிழ்க்கப்படும் என்ற பொருளில், **‘கறைகெழு குடிகள் கைதலை வைப்ப..’** என்று எழுதியவர் இளங்கோ. ஜி.எஸ்.டி. வரி போட்ட இவர்களை அதனால்தான் சிலப்பதிகாரத்தைப் படிக்கச் சொல்கிறோம்.

கொடுங்கோன்மை இருக்கும் ஆட்சி எப்போது முடியும் என்று மக்கள் தினமும் சிந்தித்துக் கொண்டே இருப்பார்கள் என்ற பொருளில், **‘கொடுங்கோல் வேந்தன் குடிகள் போல’** என்று எழுதிய சிலம்பை அவர்கள் வாசிக்க வேண்டாமா?

குடிகளை பயமுறுத்தும் வகையில் ஆட்சி செய்யக் கூடாது என்கிறது சிலம்பு. அதை அவர்கள் வாசிக்க வேண்டாமா?

தனக்கு ஏற்பட்ட அநீதியைத் தட்டிக் கேட்காத இந்த ஊரில் தெய்வமும் உண்டா என்று கேட்டவள் கண்ணகி.

**‘தேரா மன்னா?’** என்று கேட்டவள் கண்ணகி.

ஆனால் இதை எல்லாம் அறிந்து கொள்ளாமல், அற்றை பாண்டியன் போல் அவசரப்பட்டு ‘திராவிடர்’ என்ற சொல் சிலப்பதிகாரத்தில் இல்லையே என்று பதில் சொல்லி இருக்கிறார். எதைப் போய் எதில் தேடுகிறார்?

“சிலப்பதிகாரம் கூறுவது நாம் திராவிடர் அல்லர். நாம் தமிழர்.” என்று சிலம்புச் செல்வர் சொன்னதாக நிதி அமைச்சர் சொல்லி இருக்கிறார். திராவிட இயக்கத்துக்கு எதிர் நிலையில் செயல்பட்டவர் ம.பொ.சி. இராஜாஜியின் சீடர் இவர். ‘நான் போக முடியாத இடங்களுக்கு சக்கர வியூகத்தை உடைத்து அனுப்புவதற்காக இவரை வைத்திருக்கிறேன்’ என்று இராஜாஜியே சொன்னார். திராவிட இயக்கத்தை விமர்சிப்பதற்காக நேரடியாக வர முடியாதவர்கள் ம.பொ.சி.யை பயன்படுத்திக் கொண்டார்கள்.

இந்தி எதிர்ப்பு போராட்டங்கள் நடந்த காலத்தில் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை நடத்தியவர் இவர். இந்தி எழுத்துக்களை தார் வைத்து திராவிட இயக்கம் அழித்தபோது, மண்எண்ணெய் வைத்து தாரை அழித்தவர் ம.பொ.சி.

அவரது தமிழ்ப் பற்று, எழுத்தாற்றல், இதழியல் தொண்டு ஆகியவற்றில் நாம் குறை காணவில்லை. ஆனால் அதை திராவிட இயக்க எதிர்ப்புக்கு பயன்படுத்தினார் அவர். அவரது இந்தி ஆதரவு என்பது சமஸ்கிருத ஆதரவு என்கிற நிலைக்குப் போனது. சமஸ்கிருதத்தை தனது கலாச்சார மொழி என்று பெருமை பொங்க அழைத்துக் கொண்ட விநோதமான தமிழ்த் தேசியத் தலைவர் அவர். எனவே ம.பொ.சி. அப்படித்தான் பேசுவார்.

**திராவிட இயக்கத்தை எதிர்த்த ம.பொ.சி. அவர்கள்தான் 1967 தேர்தலில் தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்து உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டார். தியாகராயர் நகர் தொகுதியில் வென்றார். 1971 தேர்தலில் உதய சூரியன் சின்னத்தில் மயிலாப்பூரில் நின்றாலும் வெற்றி வாய்ப்பை இழந்தார். முதல்வர் கலைஞர் அவர்கள்தான் அவரை சட்டமன்ற மேலவை துணைத் தலைவராக ஆக்கினார். பிற்காலத்தில் சென்னையில் அவருக்கு சிலை வைத்தவரும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்தான்!**

திராவிட எதிர்ப்பாளரான ம.பொ.சி. புத்தகத்திலா திராவிடத்தை தேடுவது? மோடியின் உரையிலா ‘அதானி’யைத் தேடுவது?

தமிழ் வரலாறு எழுதிய ரா.இராகவையங்கார், **“வடமொழியாளர் த்ரமிளர் எனத் தமிழ் மொழியாளரையும், த்ரமிளம், த்ராவிடம் என அவர் தம் நாட்டினரையும் மொழியினரையும் குறித்தனர்”** என்கிறார்.

**‘றிராவிட மென்றியல் பாடை’** என்கிறது காஞ்சி புராணம்.

**‘வல்லான் ஒருத்தன் வரவும் திராவிடத்திலே வந்ததா விவகரிப்பேன்’** என்கிறார் தாயுமானவர்.

நாலாயிர திவ்ய பிரபந்தத்துக்கு **‘திராவிட வேதம்’** என்று பெயர்.

சிவஞானயோகிகள் எழுதிய நூலுக்கே **‘திராவிட மாபாடியம்’** என்று தான் பெயர்.

**‘தெக்கணமும் அதிற் சிறந்த திராவிடமும்’** என்கிறது தமிழ்த்தாய் வாழ்த்து.

பி.டி.சீனிவாச அய்யங்கார் எழுதிய ‘தமிழர் வரலாறு’ படிக்கவும். கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி எழுதிய ‘தென்னிந்திய வரலாறு’ படிக்கவும். கி.மு.155 ஆம் ஆண்டு தமிழக வேந்தர் கூட்டணியை முறியடித்தான் கலிங்க நாட்டை ஆண்ட காரவேலன். அந்த மன்னன் யாரை முறியடித்ததாக கல்வெட்டு எழுதினான் என்றால், **‘திரமிள தேச சங்காத்தம்’** என்ற கூட்டணியை வீழ்த்தியதாக கல்வெட்டு எழுதி வைத்தான். தமிழக வேந்தர் கூட்டணிக்கு கலிங்க மன்னன் வைத்த பெயர். அசோகர் காலத்துக்குப் பிறகு நமக்குக் கிடைத்த மிகப்பழைய கல்வெட்டு இந்த ஹத்திரும்பிக் கல்வெட்டுதான்.

**எனவே, ம.பொ.சி.யை தூசி தட்டி எடுத்து வர வேண்டாம். எங்களிடம் பழங்கால பனுவல்கள் ஏராளமாக உண்டு. திரும்பத் திரும்பச் சொல்வது, ‘திராவிடம்’ என்பது ஒரு கருத்தியல் வடிவம். அது நிர்மலா சீதாராமன்களுக்கும் அவரை ஆட்டுவிக்கும் ஆரியத்துக்கும் எதிரான கருத்தியல் ஆகும். அதனை உரக்கவே உச்சரிப்போம். மாற்றிக் கொள்ள மாட்டோம்.**

## சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ராஜஸ்தான் பயணியிடம் இருந்து ரூ.1.56 கோடி நகைகள் பறிமுதல்!

சென்னை, ஆக.16–

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ராஜஸ்தானில் இருந்து வந்த பயணியிடம் இருந்து ரூ.1.56 கோடி மதிப்புள்ள தங்க, வைர நகைகள் பறிமுதல் செய்துள்ளனர்.

உரிய ஆவணங்கள் இல்லாததால் ரயில்வே காவல் துறையினர் பறிமுதல் செய்யப்பட்ட நகைகளை வருமான வரித்துறையிடம் ஒப்படைத்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம்(14.08.2023) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 80 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருக்கோயில்களில் கட்டப்படவுள்ள திருமண மண்டபம், திருக்குளப் பணிகள், பக்தர்கள் தங்கும் விடுதி, வணிக வளாகம், தடுப்புச் சுவர்கள், முடிகாணிக்கை மண்டபம், பக்தர்கள் இளைப்பாறும் மண்டபம், உணவருந்தும் கூடம், அடுக்குமாடி குடியிருப்புகள், கல்லூரி ஆய்வகங்கள் போன்ற புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## உயர்கல்வித்துறை சார்பில் ரூ.87.77 கோடியில் கட்டப்பட்ட கல்விசார் கட்டடங்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக. 16-

**உயர்கல்வித் துறை சார்பில் ரூ.87.77 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.08.2023) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் 87 கோடியே 76 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகங்கள், விடுதிகள், ஆராய்ச்சி மையம், கருத்தரங்குக்கூடம் மற்றும் செய்கலைஞர் ஆய்வுக்கூடங்கள் போன்ற பல்வேறு கட்டடங்களை திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர் கல்வியை பயில்வதற்கு புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், காலிப் பணியிடங்களை நிரப்புதல் போன்ற பல்வேறு திட்டங் களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

அந்த வகையில், வேலூர் தந்தை பெரியார் அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் 150 மாணவர்கள் தங்கும் வகையில் 8 கோடியே 43 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடம்; கோயம்புத்தூர் அரசு தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டடங்கள்; திருப்பூர் எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் சிதிலமடைந்துள்ள முதன்மை கட்டடத்திற்கு மாற்றாக 10 கோடியே 94 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம்;

கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தில் தற்போதுள்ள நவீன அறிவியல் ஆய்வகக் கட்டடத்தின் மேல்பகுதியில் 3 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் தளங்கள் மற்றும் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மகாகவி பாரதியார் ஆராய்ச்சி மையம்;

நாமக்கல் என்.கே.ஆர். அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 3 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 18 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்; புதுக்கோட்டை மாமன்னர் கல்லூரியில் 3 கோடியே 4 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 16 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள்;

காரைக்குடி அழகப்ப செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் 159 மாணவர்கள் தங்கும் வகையில் 8 கோடியே 36 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆண்கள் விடுதிக் கட்டடம்; மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மனிதவள மேம்பாட்டு மையத்திற்கான கருத்தரங்குக் கூடம்;

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் சார்பில் கீழநத்தம் கிராமம், சீவலப்பேரி சாலையில் 6 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தொலைதூரக் கல்வி மற்றும் தொடர்நிலை கல்வி இயக்ககத்திற்கான கல்வி வளாகக் கட்டடம்; திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் 60 மாணவர்கள் தங்கும் வகையில் இரண்டாவது தளத்தில் கட்டப்பட்டுள்ள ஆண்கள் விடுதிக் கட்டடம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம், சேலம், திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரிகள் மற்றும் மதுரை அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் 23 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள செய்கலைஞர் ஆய்வுக்கூடங்கள்;

திருச்சிராப்பள்ளி, அண்ணா அறிவியல் மையக் கோளரங்கத்தில் 3 கோடி ரூபாய் செலவில் நவீனப் படுத்தப்பட்ட எண்ணிலக்க முழுக்கோள அமைப்பு கோளரங்கம்; என மொத்தம் 87 கோடியே 76 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித் துறை கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் ஆ.கார்த்திக், தொழில்நுட்ப கல்வி இயக்குநர் வினய், கல்லூரி கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) முனைவர் கீதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தீ விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு கட்ட ஆணை மற்றும் நிவாரண உதவிகள்!

### அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தகவல்!

*நாமக்கல், ஆக. 16 -*

*நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் கிராமம், ஆலம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட சின்னா கவுண்டம்பாளையம் பகுதியில் தீ விபத்தினால் சேதமடைந்த வீடுகளை பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக வீடு அமைப்பதற்கு உத்தரவு மற்றும் நிவாரண பொருட்களை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.*

*மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ். எம்.மதுரா செந்தில் முன்னிலை வகித்தார்.*

*இந்நிகழ்வில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கொண்டு தீ விபத்தினால் சேதமடைந்த வீடுகளை பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக வீடு அமைப்பதற்கு உத்தரவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார்.*

*தொடர்ந்து, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தீ விபத்தினால் வீடுகள் முழுவதும் சேதமடைந்த 4 குடும்பத்தினருக்கு தலா ரூ.1.25 லட்சம் வீதம் தற்காலிக வீடுகள் அமைப்பதற்கான உத்தரவுகளையும், வீட்டின் முன்புறம் உள்ள கீற்றுக் கொட்டகை சேதம் அடைந்த குடும்பத்தினருக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தலா ரூ.25,000/, பாதிக்கப்பட்ட 6 குடும்பங்களுக்கும் ஒரு மாதத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள், தீ விபத்தினால் சேதமடைந்த பட்டா, குடும்ப அட்டை, ஆதார் அட்டை, பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்டவைகளையும் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கி ஆறுதல் கூறினார்.*

*மேலும், கடந்த 8.8.2023 அன்று சூறாவளி காற்றினால் செங்கல் சூளை புகைப் போக்கி விழுந்து கோபால் என்பவர் உயிரிழந்தமைக்காக பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 4.00 லட்சம் நிவாரண உதவித்தொகையினை வழங்கினார்.*

*பின்னர் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்ததாவது: குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் கிராமம் ஆலம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட சின்னா கவுண்டம்பாளையம் பகுதியில் கடந்த 11.08.2023 அன்று இரவு சுமார் 9.45 மணியளவில் எதிர்பாரத விதமாக தீ விபத்து ஏற்பட்ட காரணத்தால் 6 வீடுகள் சேதமடைந்துள்ளது. தீ விபத்து ஏற்பட்ட நேரத்தில் வீடுகளில் யாரும் இல்லாத காரணத்தால் பெரிய ஆபத்து ஏற்படவில்லை.*

*இன்றையதினம் சேதமடைந்த இடங்களை பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு, குக்கர், குடம், அரிசி, காய்கறிகள் உள்ளிட்ட மளிகை பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் வீடு கட்டுவதற்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.ராஜேஸ்குமார் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் நிதியி லிருந்து ரூ.3.00 லட்சம் வழங்கியுள்ளார்.*

*மாவட்ட ஆட்சித்தலைவர் தன்விருப்ப நிதியிலிருந்து ரூ.1.50 லட்சம் என மொத்தம் ரூ.4.50 லட்சம் வழங்கியுள்ளார்கள். மேலும், வீடு கட்டும் வரை பாதிக்கப்பட்டவர்கள் தங்குவதற்கு தங்குமிடம், உணவு பொருட்கள், குழந்தைகளின் கல்வி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டுள்ளது.*

*மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், தமிழ்நாடு அரசின் சார்பாகவும் அனைத்து வசதிகளும் செய்து தரப்படும். கடந்த 08.8.2023 அன்று சூறாவளி காற்றினால் செங்கல் சூளை புகைப் போக்கி விழுந்து கோபால் என்பவர் உயிரிழந்ததற்கு பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.4.00 லட்சம் வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்கள்.*

*அதன்படி ரூ.4.00 லட்சம் உயிரிழந்த கோபால் அவர்களின் மனைவிக்கு வழங்கப்பட்டுள்ளது என வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில், வருவாய் கோட்டாட்சியர் ப.கௌசல்யா, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ரமேஷ், ஆலாம்பாபாளையம் பேரூராட்சி தலைவர் சகுந்தலா, துணைத் தலைவர் சண்முகப்பிரியா, குமாரபாளையம் வட்டாட்சியர் சண்முகவேல், ஆலாம்பாளையம் பேரூர் கழகச் செயலாளர் கார்த்திக் ராஜா, ஆலாம்பாளையம் பேரூராட்சி தலைவர் சகுந்தலா, பள்ளிபாளையம் நகர மன்ற தலைவர் செல்வராஜ், மாநில பொதுக்குழு உறுப்பினர் ரவிச்சந்திரன், மாவட்ட அவைத் தலைவர் நடனசபாபதி மற்றும் ஆலாம்பாளையம் பேரூராட்சி கவுன்சிலர்கள் நகர்ப்புற உள்ளாட்சித் துறை அதிகாரிகள் மாவட்ட நிர்வாக அதிகாரிகள் மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியச் செயலாளர் பி.எஸ்.சரவணன் ஏற்பாட்டில் போதகாடு கிராமத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் புதிய கழகக் கொடியினை ஏற்றி வைத்து, திராவிட மாடல் ஆட்சியின் நலத்திட்டங்கள் குறித்து விளக்கி பேசினார். இதில் தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், கிழக்கு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, அவைத்தலைவர் கே.மனோகரன், மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் இரா.தாமரைச்செல்வன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் சூடப்பட்டி சுப்ரமணி, மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் சத்யமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இரா.சித்தார்த்தன், சென்னகிருஷ்னன், எம்.ஜி.சேகர், மாவட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் ஆ.மணி, தேவ்ஆனந்த், மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்... முதல் பக்கத் தொடர்ச்சி

கணக்கில் பணம் கட்டிப் படித்தால் வெற்றி பெறக்கூடிய தேர்வு முறையாக இருக்கிறது. அப்படி பணம் கட்டி படிக்க முடியாதவர்கள் தோற்றுப் போகிறார்கள். பணம் கட்டி இரண்டு மூன்று ஆண்டுகள் படிக்க பணம் வைத்திருப்பவர்களால் வெற்றி பெற முடிகிறது. குறைவான மதிப்பெண் எடுத்து 'நீட்' தேர்வில் வெற்றி என்ற தகுதியைப் பெற்று விட்டவர்களும், பணம் வைத்திருந்தால் மருத்துவக் கல்லூரியில் சேர முடியும் என்ற நிலைமை உள்ளது. இதை வைத்துப் பார்க்கும் போது பணம் படைத்தவர்களுக்கே மருத்துவக் கல்வி என்ற நிலைமையை உருவாக்கி விட்டார்கள்.

**பயிற்சி நிறுவனங்களின் கைப்பாவை!**

அதை மீறி இதனுள் நுழையும் ஏழை எளிய அரசு பள்ளி மாணவர்கள் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் 7.5 விழுக்காடு இடஒதுக்கீட்டால் சேர்பவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் இது எதுவும் ஆளுநர் ஆர்.என்.ரவிக்குத் தெரியவில்லை. புரிந்து கொள்ள மறுக்கிறார். அல்லது பயிற்சி நிறுவனங்களின் கைப்பாவையாக அவர் செயல்படுகிறாரோ என்ற சந்தேகம் வருகிறது. ஆன்லைன் சூதாட்ட மசோதாவுக்குக் கையெழுத்து போடாமல் இருந்த நேரத்தில் அந்த நிறுவனத்தைச் சேர்ந்தவர்களையே சந்தித்தார். இப்போது ஆளுநர் மாளிகையில் உட்கார்ந்து கொண்டு நாள்தோறும் மாணவர்களை வரவழைத்து கோச்சிங் சென்டரைப் போல பாடம் நடத்திக் கொண்டு இருக்கிறார்.

அவரிடம் நேருக்கு நேராகவே சேலம் மாணவி ஒருவரின் தந்தை கேள்வி கேட்டார். அதற்கு ஆளுநரால் பதிலளிக்க முடியவில்லை. "நீட் விலக்கு மசோதாவுக்கு நான் கையெழுத்துப் போட மாட்டேன்" என்று ஆளுநர் சொல்லி இருப்பதைப் பார்த்தால் அவரது அறியாமைதான் தெரிகிறது. அவரது கையெழுத்துக்காக இந்த மசோதா காத்திருக்கவில்லை. அது குடியரசுத் தலைவரிடம்தான் நிற்கிறது. இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் அவருக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஏதோ அதிகாரம் இருப்பதைப் போல அவர் காற்றில் கம்பு சுற்றிக் கொண்டு இருக்கிறார்.

ஜெகதீஸ்வரன் போன்ற எத்தனை உயிர்கள் பலியானாலும் ஆளுநர் ஆர்.என்.ரவி போன்றவர்களின் இதயம் கரையப் போவதில்லை. இப்படிப்பட்ட கல்மனசுக்காரர்களின் காலத்தில் மனித உயிர்களுக்கு மதிப்பு இல்லை.

இன்னும் சில மாதங்களில் நாங்கள் ஏற்படுத்த நினைக்கும் அரசியல் மாற்றம் நடக்கும் போது நீட் தடுப்புச் சுவர் பொலபொலவென உதிர்ந்து விழும். "கையெழுத்து போடமாட்டேன்" என்பவர்கள் எல்லாம் காணாமல் போய்விடுவார்கள்.

மாணவன் ஜெகதீஸ்வரன், அவரது தந்தை செல்வசேகர் ஆகிய இருவரது மறைவுக்கும் எனது ஆழமான அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களது மரணமே, 'நீட்' பலிபீடத்தின் இறுதி மரணமாக இருக்கட்டும்.

அறிவுமிகு மாணவக் கண்மணிகளே, உங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் காத்திருக்கிறது. தன்னம்பிக்கை கொள்ளுங்கள். வாழ்ந்து காட்டுங்கள். பிறரையும் வாழ வையுங்கள். உயிரை மாய்த்துக் கொள்ளும் சிந்தனை வேண்டாம் என்று மீண்டும் மீண்டும் உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# குடியரசுத் தலைவருக்கு முதல்வர் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

மேற்கொண்டு, தீர்வுகள் குறித்த தனது பரிந்துரைகளைச் சமர்ப்பித்ததாகவும், இந்தக் குழுவின் அறிக்கை மற்றும் பல்வேறு விவாதங்களின் அடிப்படையில், தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கை சட்டமுன்வடிவு, 2021' (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021), தமிழ்நாடு சட்டமன்றத்தில் 13.9.2021 அன்று நிறைவேற்றப்பட்டு, 18.9.2021 அன்று தமிழ்நாடு ஆளுநருக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஆளுநரால் ஐந்து மாத காலத்திற்குப் பிறகு இச்சட்டமுன்வடிவு திருப்பி அனுப்பப்பட்டதாகவும், 8.2.2022 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் மீண்டும் இச்சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டு, மறுபரிசீலனைக்குப் பிறகு மீண்டும் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்கு ஏதுவாக ஆளுநருக்கு மீண்டும் அனுப்பப்பட்டதாகவும், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், இந்த மசோதாவை ஒன்றிய உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி, தற்போது நிலுவையில் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவு தொடர்பாக, ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் 21.6.2022 அன்று கோரியிருந்த விளக்கங்கள், ஒன்றிய உயர்கல்வி அமைச்சகம் 26.08.2022, 15.05.2023 ஆகிய தேதிகளில் கோரியிருந்த விளக்கங்கள், ஒன்றிய ஆயுஷ் அமைச்சகம் 13.01.2023 அன்று கோரியிருந்த விளக்கங்கள், ஒன்றிய உள்துறை அமைச்சகத்தின் மூலம் பெறப்பட்டதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய அமைச்சகங்கள் கோரியிருந்த அனைத்து விவரங்களையும் தமிழ்நாடு அரசு விரைவாக வழங்கியதாகவும் தனது கடிதத்தில் குறிப்பி ட்டுள்ளார்.

**'நீட்' தேர்வினால் தமிழ்நாட்டில் தற்கொலைகள் தொடரும் துயரம்!**

ஆனால், தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவிற்கு இதுவரை ஒப்புதல் அளிக்கப்படாததால், நீட் அடிப்படையிலான மாணவர் சேர்க்கை முறையைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகவும், இது மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் மனதில் மிகுந்த கவலையையும், மன அழுத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகவும், நீட் தேர்வின் மூலம் சேர்க்கை கிடைக்காத விரக்தியில் மாணவர்களும், சில நிகழ்வுகளில் அவர்களது பெற்றோர்களும் தற்கொலை செய்து கொள்ளும் பல்வேறு சோகமான சம்பவங்கள் நடந்துள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

அண்மையில்கூட, நீட் தேர்வில் தோல்வியடைந்த மன உளைச்சலில், சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த மாணவர் ஒருவரும், அவரது தந்தையும் தற்கொலை செய்து கொண்டனர் என்றும், தமிழ்நாட்டில் நீட் தேர்வால் தற்கொலை செய்து கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை 16 ஆக உயர்ந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், நீட் தேர்வில் இருந்து விலக்கு கோரும் மசோதாவுக்கு ஒப்புதல் அளித்து, பிளஸ் 2 மதிப்பெண்கள் மூலம் மருத்துவ மாணவர் சேர்க்கை நடந்திருந்தால், இது போன்ற சோக நிகழ்வுகளை நிச்சயம் தவிர்த்திருக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

**தமிழ்நாடு சட்டப்பேரவை தீர்மானம் தமிழர்களின் ஒட்டுமொத்த பிரதிபலிப்பு!**

தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய நீட் விலக்கு மசோதா, தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த கருத்தின் பிரதிபலிப்பு என்றும், அதனைச் செயல்படுத்துவதில் ஏற்படும் ஒவ்வொரு நாள் தாமதமும், தகுதியான மாணவர்களுக்கு மருத்துவ சேர்க்கை கிடைப்பதில் பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு மட்டுமல்ல, சமுதாயத்தில் விலைமதிப்பற்ற மனித உயிரிழப்புகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகிறது என்று தெரிவித்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இந்த விவகாரத்தில் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்ட நீட் தொடர்பான மசோதாவுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.



'நீட்' தேர்வு கொடுமை காரணமாக மருத்துவப் படிப்பில் சேர இயலாத வேதனையில் குரோம்பேட்டையைச் சேர்ந்த மாணவர் ஜெகதீஸ்வரன் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட துயரம் மறைவதற்குள் – மகன் இறந்த துக்கம் தாளாது மாணவனின் தந்தை செல்வசேகரும் தூக்கிட்டு உயிரை மாய்த்துக் கொண்டார். இந்தத் துயரச் செய்தியறிந்து – கழகத்தின் சார்பில், கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மறைந்த செல்வசேகரன் அவர்களின் உடலுக்கு மலர் மாலை வைத்து கண்ணீர் அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன், இ.கருணாநிதி எம்.எல்.ஏ., டாக்டர் எழிலன் எம்.எல்.ஏ., துணைமேயர் ஜி.காமராஜ் உள்ளிட்டோர் அப்போது உடனிருந்தனர்.

## ஆளுநர் தன் கடமையிலிருந்து தவறியதுதான் இந்தத் தற்கொலைகளுக்குக் காரணம்!

# தமிழ்நாட்டு மாணவர்களின் கனவைச் சிதைத்து உயிரைப் பறிக்கும் 'நீட்'டை ஒழிக்கிற காலம் தொலைவில் இல்லை!

## வலைதளப் பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

**சென்னை, ஆக. 16–**

**'நீட்' கொடுமையால் தமது மகன் ஜெகதீஸ்வரன் தற்கொலை செய்த துயரம் தாளாது, தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட, அம்மாணவனின் தந்தை செல்வசேகரன் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தியபின், வலைதளங்களில் பதிவிட்ட கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள், "தமிழ்நாட்டு ஆளுநர், தன் கடமையிலிருந்து தவறியதுதான் இந்தத் தற்கொலைகளுக்குக் காரணம்!" என்று குற்றம் சாட்டியுள்ளார்.**

**மேலும் அப்பதிவில் அவர், "தமிழ்நாட்டு மாணவர்களின் கனவைச் சிதைத்து உயிரைப் பறிக்கும் "நீட்'டை ஒழிக்கிற காலம் தொலைவில் இல்லை!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின், அந்த வலைதளப்பதிவு வருமாறு:

**குரோம்பேட்டையைச் சேர்ந்த தம்பி ஜெகதீஸ்வரன் , நீட் தேர்வில் 2 முறை தோல்வியடைந்த விரக்தியில் தற்கொலை செய்து கொண்ட சோகம் மறைவதற்குள், அவருடைய தந்தை திரு.செல்வசேகர் அவர்களும் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டுள்ளார்.**



மாணவன்
ஜெகதீஸ்வரன்



தந்தை
செல்வசேகர்

**பிள்ளைகளைப் பலிவாங்கிய 'நீட்' இப்போது பெற்றோரையும் மரணக்குழியில் தள்ளுவதுமிகுந்தவேதனையைத் தருகிறது.**

**குரோம்பேட்டை அரசு மருத்துமவமனையில் செல்வசேகர் அவர்களுடைய திருவுடலுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தோம். நமக்கே ஆறுதல் தேவை என்ற நிலையில், அவருடைய உறவினர்களைத் தேற்றினோம்.**

**'நீட்' ரத்துக்காக இரு முறை தமிழ்நாடு சட்டமன்றத்தில் மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டும், அதனைக் கிடப்பில் போடுவதும், திருப்பி அனுப்புவதும் என்று, ஆளுநர் தன் கடமையிலிருந்து தவறியதுதான் இந்தத் தற்கொலைகளுக்குக் காரணம்.**

**தமிழ்நாட்டு மாணவர்களின் கனவைச் சிதைத்து உயிரைப்பறிக்கும் நீட்டை ஒழிக்கிற காலம் தொலைவில் இல்லை. இதற்கான தீர்வு 2024 மக்களவைத் தேர்தலுக்குப் பின் நிச்சயம் ஏற்படும்.**

**எனவே, மாணவச்செல்வங்கள் தன்னம்பிக்கையுடனும் மனஉறுதியுடனும் இருக்க வேண்டுமென உங்களின் அண்ணனாக கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு அப்பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உருக்கமுடன் வேண்டியுள்ளார்.

## மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையினை முற்றாக ஒழித்திட

# கழிவுநீர் கட்டமைப்பினை பராமரிக்க ரூ.54.60 கோடியில் இயந்திரங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக. 16-

முதலமைச்சர் அவர்கள், மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையினை முற்றிலும் அகற்றிடும் வகையில், சென்னை பெருநகர பகுதியில் கழிவுநீர் கட்டமைப்பு பராமரிப்பினை இயந்திரமயமாக்க, மொத்தம் ரூ.54.60 கோடி மதிப்பீட்டில் 66 கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை கொள்முதல் செய்திட நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்.

அரசு, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் மூலம், 426 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ள, சுமார் 86 இலட்சம் மக்கள் தொகை கொண்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதியில், மக்களுக்கு தேவையான அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கவும் மற்றும் உருவாகும் கழிவுநீரை அறிவியல் பூர்வமான முறையில் சுத்திகரிப்பு செய்து, பாதுகாப்பான முறையில் வெளியேற்றவும், தேவையான கட்டமைப்புகளை உருவாக்கி பராமரித்து வருவதோடு, அவற்றை தொடர்ந்து மேம்படுத்திடவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமானது சுமார் 4,149 கி.மீ. நீளம் கொண்ட கழிவுநீர் கட்டமைப்பினை பராமரித்து வருகிறது.

இந்நிலையில், அரசு, மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையை முழுமையாக ஒழித்திட தேவையான பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதன்படி, பெருநகர சென்னை பகுதியில் கழிவுநீர் கட்டமைப்பின் பராமரிப்பினை முற்றிலும் இயந்திரமயமாக்க முனைப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கென, தேவையான இயந்திரங்கள் படிப்படியாக கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.

இதன்பகுதியாக, முப்பது எண்ணிக்கையில் ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட சிறு கழிவுநீர் அடைப்பு நீக்கும் இயந்திரம் மற்றும் தூர்வாரும் இயந்திரம், எட்டு எண்ணிக்கையில் இரண்டாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட சிறு கழிவுநீர் அடைப்பு நீக்கும் இயந்திரம், பத்து எண்ணிக்கையில் ஒன்பதாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கழிவுநீர் அடைப்பு நீக்கும் மற்றும் உறிஞ்சும் இயந்திரம், பத்து எண்ணிக்கையில் எட்டாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரம், எட்டு எண்ணிக்கையில் பதின்மூன்றாயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் மற்றும் கழிவுநீர் அடைப்பு நீக்கும் இயந்திரம் என, ரூ.54.60 கோடி மதிப்பீட்டில் மொத்தம் அறுபத்தாறு (66) எண்ணிக்கையில் கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை, மாநில அரசின் நிதிப்பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்திட, முதலமைச்சர் அவர்கள் நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

இந்நடவடிக்கை, தமிழ்நாட்டில் மனித கழிவுகளை மனிதர்களே அகற்றும் முறையினை முற்றிலும் அகற்றிடும் வகையில், கழிவுநீர் கட்டமைப்பு பராமரிப்பினை இயந்திரமயமாக்க இவ்வரசு மேற்கொண்டுள்ள சீரிய நடவடிக்கைகளில், முக்கிய நிகழ்வாக அமைந்துள்ளது.

தமிழ்நாடு அரசு / பொதுப்பணித்துறை
கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., அலுவலகம், திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சேப்பாக்கம், சென்னை – 600 005.
கலைஞர் 100 1924 - 2023
சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா
**குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். 05 / 2023–2024 / தி (ம) வ வட்டம் , சென்னை– 05, நாள் 11.08.2023**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை – மொத்த வகை / இரு உறை முறை**
தமிழக ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் சிறப்பு தலைமைப் பொறியாளர், பொ.ப.து. திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சேப்பாக்கம், சென்னை–600 005 அவர்களால் கீழ்காணும் பணிக்கு பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மின்னணு ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகின்றது.
**பணியின் பெயர் : (1)** சென்னை எழும்பூரில் உள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி பாரம்பரிய கட்டிடத்தின் பாதுகாப்பு, புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணி . **(2)** கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பாரம்பரிய கட்டிடமான ஆராய்ச்சி நிறுவனத்தின் (கட்டம்–II தென் பகுதி) பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு பணி . **(3)** சிவகங்கை மாவட்டத்தின் காரைக்குடி தாலுகாவில் உள்ள சங்கரபதி கோட்டை– பாரம்பரியக் கட்டமைப்பின் பாதுகாப்பு, புதுப்பித்தல் மற்றும் மறுசீரமைப்பு பணி. **(4)** விருதுநகர் மாவட்டத்தில் உள்ள விருதுநகரில் மாஸ்டர் பிளான் வளாகத்தில் புதிய அருங்காட்சியக கட்டிடம் கட்டும் பணி. **பணியின் தோராய மதிப்பு (ஜிஎஸ்டி உட்பட) :** (1) ரூ. 700.85 இலட்சம் (2) ரூ. 604.20 இலட்சம் (3) ரூ. 738.52 இலட்சம் (4) ரூ. 576.40 இலட்சம். **முன்வைப்புத் தொகை மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் :** (1) ரூ. 3,61,000/– 18 மாதங்கள். (2) ரூ. 3,13,000/– 18 மாதங்கள். (3) ரூ. 3,80,000/– 18 மாதங்கள். (4) ரூ. 3,00,000/– 18 மாதங்கள். **தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தகாரர்கள்: வ. எண். (1) to (4) :** வகுப்பு – II மற்றும் அதற்கு மேல் (திருத்திய பண வரம்பின்படி). **முன்வைப்புத் தொகை வரவு வைத்து கட்ட வேண்டிய அலுவலர் : வ. எண். (1) to (4) :** செயற் பொறியாளர், பொ.ப.து., கட்டட மையம் மற்றும் பாதுகாப்பு கோட்டம், சேப்பாக்கம், சென்னை – 600 005.
**(1)** ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு **http://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியை அணுகவும். **(2)** ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணைய வழியில் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : **31.08.2023 பிற்பகல் 3.00 மணி வரை. (3)** மின்னணு ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **01.09.2023 பிற்பகல் 4.00 மணி.**
**சிறப்பு தலைமைப் பொறியாளர், பொ.ப.து, திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம், சேப்பாக்கம், சென்னை – 600 005.**
செ.ம.தொ.இ/4531/ஒப்பந்தப்புள்ளி/2023 "சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்."

# ஆளுநர் ரவி ஆர்.எஸ்.எஸின் பிரதிநிதி!

## இரா.முத்தரசன் கடும் விமர்சனம்!

சென்னை, ஆக. 16-

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கூறியிருப்பதாவது: ஆளுநர் ரவி நீட் விலக்கு மசோதாவிற்கு ஒருபோதும் கையெழுத்திட மாட்டேன் எனக் கூறியது கண்டனத்திற்குரியது. ஆளுநர் ஆர்.என்.ரவி வகிக்கும் பொறுப்பு உயரிய பொறுப்பு. அந்த பொறுப்புக்கு மேலும் பொறுப்பு சேர்க்கும் வகையில் ஆளுநர் செயல்படவில்லை.

அவர் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின்பிரதிநிதியாக, பா.ஜ.க.வின் மிகச் சிறந்த தொண்டராக செயல்படுகிறார். அவர் ஆர்.எஸ்.எஸ். கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ளார். அவர் ஆளுநர் பொறுப்பில் இருந்து கொண்டு சர்ச்சைக்குரிய கருத்துக்களை கூறுவது தவறானது. நீட் விலக்கு தீர்மானம் என்பது சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம். இது தி.மு.க உள்ளிட்ட பிற கட்சியின் பிரச்சினை அல்ல, மாறாக இது பொது பிரச்சினை.



பணியிலிருக்கும் சிறந்த மருத்துவர்கள் யாரும் நீட் தேர்வை எழுதவில்லை.

நாட்டிலேயே மிகச்சிறந்த மருத்துவர்களும், அதிக மருத்துவக் கல்லூரிகளும் இருப்பது தமிழ்நாட்டில்தான். இங்கு உலக நாடுகளிலிருந்தும், இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்தும் சிகிச்சை பெற தமிழ்நாட்டிற்குத் தான் வருகிறார்கள். நீட் தேர்வால்தான் தகுதியானவர்களை தேர்ந்தெடுக்க முடியும் என்பது அப்பட்டமான பொய், திசை திருப்பும் நடவடிக்கை தான்.

நீட் தேர்வு மூலம் பயன் பெறுவது கோச்சிங் சென்டர்கள்தான். சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாவின் மீது ஆளுநருக்கு மாற்றுக் கருத்து இருக்குமேயானால் அது குறித்து விளக்கம் கேட்டு கடிதம் எழுதலாம் அல்லது முதலமைச்சரை நேரில் சந்தித்து பேசலாம். ஆனால் மசோதாவிற்கு கையெழுத்து போட மாட்டேன் என்கிற அதிகாரத்தை அவருக்கு வழங்கியது யார்? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராக போட்டி அரசாங்கத்தை ஆளுநர் நடத்தி வருகிறார். இது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு இரா.முத்தரசன் கூறியுள்ளார்.



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி தருமபுரி கிழக்கு ஒன்றியம், மாதேமங்கலம் குட்டூரில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் கழகக் கொடிஏற்றி, தர்மபுரி கிழக்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி முத்துலட்சுமி சேகர் ஏற்பாட்டில் 150 பெண்களுக்கு தையல் மெஷினும், நலிவுற்ற குடும்ப பெண்களுக்கு ரொக்க பணமும் வழங்கினார்.இந்நிகழ்ச்சியில் தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி, தர்மபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளரும், தருமபுரி தொகுதி பார்வையாளருமான டாக்டர் ஏ.கே. தருண், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தருமச்செல்வன், நல்லம்பள்ளி கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.எஸ்.சண்முகம், நகர மன்றத் தலைவர் திருமதி.மா.லட்சுமி, உதவியாளர் தேவ் ஆனந்த் மற்றும் மாநில மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கழகச் செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைச் செயலாளர்கள் பிரதிநிதிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.




கோவை தெற்கு மாவட்ட மதுக்கரை ஒன்றியம் வெள்ளலூர் பேரூர்க் கழகம் சார்பாக நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் வெள்ளலூர் பேரூர் கழகச் செயலாளர் கே.ராஜ் தலைமையில் நடைபெற்றது. மதுக்கரை ஒன்றியக் கழகச் செயலாளர் இரா. விஜயசேகரன் வரவேற்புரையாற்றினார். இவ்விழாவில் கழக துணைப் பொதுச் செயலாளரும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா சிறப்புரையாற்றினார். மேலும் தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் ரூபாய் 10 லட்சம் மதிப்பீட்டில் தையல் மிஷின் 200 பேருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் வழங்கினார். கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# ஆளுநரின் தேநீர் விருந்து: முதல்வர் புறக்கணிப்பு!

முதல் பக்கத் தொடர்ச்சி

இளைஞர்களையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

ஏழு ஆண்டுகளாக தமிழ்நாட்டில் நடந்து வரும் நீட் எதிர்ப்புப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் ஆளுநர் பொறுப்பில் இருப்பவர் பொறுப்பின்றிப் பேசுகிறார்.

தமிழ் மக்களைப் பற்றி அக்கறையுள்ளோர், தமிழர் உயிர் துறப்பதைக் கண்டு கலங்குவர். ஆனால், ஆளுநர் ரவியின் செயல்பாடுகள், 'அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை' என்பது போல உள்ளது. இந்த நிலை மாறவே, நீட் தேர்வுக்கு விலக்கு கோரி, சட்டம் இயற்றி, தமிழ்நாடு அரசு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்துள்ளது. குடியரசுத் தலைவர் அவர்கள், இதற்கு ஒப்புதல் வழங்கக் கோரி, 14.8.2023 அன்று கடிதம் அனுப்புகிறேன்.

ஆளுநர் அவர்கள், அரசியல் ரீதியாக திராவிடம், ஆரியம், தி.மு.க., திருவள்ளுவர், வள்ளலார், சனாதனம் பற்றிப் பேசி வருவதை நாங்கள் மதிக்கவில்லை. அது கபட வேடம் என்பதை அறிந்தே இருக்கிறோம்; ஆரியப் புலம்பலாக ஒதுக்கித் தள்ளுகிறோம். ஆனால், ஏழை எளிய, விளிம்பு நிலை அரசுப் பள்ளி மாணவர்களின் மருத்துவக் கனவை அப்படித்தான் சிதைப்பேன் என்று நியமனப் பதவியில் இருக்கும் ஒரு ஆளுநர் கொக்கரிப்பார் என்றால், இது கல்வித் துறை மீது நடத்தப்படும் சதியாகவே கருதுகிறோம். தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்காலம் எங்களுக்கு முக்கியமானது. நாங்கள் இந்த மாநிலத்திற்கு, இந்த ஆண்டு வந்து, அடுத்த ஆண்டு செல்பவர்கள் அல்ல. ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழ் மக்களுக்காக என்றென்றும் உரிமைக் குரலை எழுப்பும் ஒரே கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

பல்கலைக் கழகங்களைச் சிதைத்தும் உயர் கல்வித் துறையைக் குழப்பியும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகள் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன் வடிவுகளுக்கு அனுமதி தராமலும் இதன் உச்சமாக தமிழ்நாட்டு மாணவர்களை, பெற்றோர்களை, அவர்களது எதிர்காலத்தைச் சிதைக்கும் வகையில் பேசி வரும் ஆளுநரை வன்மையாகக் கண்டிக்கிறேன். இதன் அடையாளமாக ஆகஸ்ட் 15 அன்று, ஆளுநர் மாளிகையில், அவர் ஏற்பாடு செய்திருக்கும் தேநீர் விருந்தினைப் புறக்கணிக்க முடிவு செய்துள்ளோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.




ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம், கோபி கலை அறிவியல் கல்லூரியில் ஈரோடு மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய துறைகளின் சார்பில் நடைபெற்ற மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மாவட்ட ஊராட்சி தலைவர் நவமணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழா: கழகத் தலைவரின் அறிவிப்பிற்கிணங்க - தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில்

# 'முத்தமிழறிஞரின் சமூக நீதி - மதச்சார்பின்மைக் கோட்பாடுகள்' எனும் தலைப்பில் நிகழ்ச்சிகள்!

## அனைத்து மாவட்டங்களிலும் நடத்திட தீர்மானம்! அணியின் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை, ஆக. 16 - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை யொட்டி, கழக ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில், கழகத் தலைவரின் அறிவுரைக்கிணங்க அனைத்து மாவட்டங்களிலும் 'முத்தமிழறிஞரின் சமூக நீதி மற்றும் மதச்சார்பின்மைக் கோட்பாடுகள்' எனும் தலைப்பில் எழுச்சியுடன் நடத்துவது என அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானிக்க ப்பட்டதாக அணியின் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் 13—8-2023 ஞாயிற்றுக்கிழமை, சென்னை, அண்ணா அறிவாலயத்திலுள்ள கழக அலுவலகத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு மாநிலச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகளான - வனத்துறை அமைச்சரும் - ஆதிதிராவிடர் நலக்குழு துணை செயலாளருமான டாக்டர் மா.மதிவேந்தன், இணைச் செயலாளர்கள் மருதூர் ராமலிங்கம், வி.பி.இராஜன், துணைச் செயலாளர்கள் அரூர் ராஜேந்திரன், மு.பொன்தோ ஸ், சி.தசரதன், மு.பரமானந்தம், மாரியப்பன் கென்னடி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னங்கள் வருமாறு:

மக்களிடம் முத்தமிழறிஞரின் சமூகநீதி மற்றும் மதசார்பின்மைக் கோட்பாடுகளை கொண்டுசேர்க்க ஆதிதிராவிடர் நலக்குழுவிற்கு பொறுப்பு வழங்கிய கழக தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

5 மண்டலத்திலும் தலா ஒரு இடத்தில் அனைவரும் வேறுபாடின்றி நாடும் அறிவுப்பசி மற்றும் வயிற்றிப் பசி ஆகிய இரண்டையும் ஆற்றும் வகையில் கல்வியாளர்களை கொண்டு தலைவர் கலைஞர் அவர்களின் சமய சார்பற்ற சமூகநீதி செயல்பாடுகள் எனும் தலைப்பில் கருத்தரங்கமும் அதனை தொடர்ந்து சமபந்தி விருந்தும் ஆதிதிராவிடர் நலக் குழு சார்பில் ஏற்பாடு செய்ய வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

கழக ஆதிதிராவிடர் நலக் குழுவின் ஒன்றிய, நகர, பேரூர் பகுதி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களை நியமித்து, கழகத்திற்கு வலுச்சேர்த்திட இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

அனைத்து கழக மாவட்டங்களிலும் "முத்தமிழறிஞரின் சமூகநீதி மற்றும் மத சார்பின்மைக் கோட்பாடுகள்" எனும் தலைப்பில் நிகழ்ச்சிகளை ஆகஸ்ட் மாதம் கடைசி வாரத்திற்குள் நடத்திட வேண்டும் என்ற தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க மிகவும் சிறப்பாக நடத்திட இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

ஆதிதிராவிடர் நலக்குழு நிகழ்ச்சிகளை நாடு முழுக்க பரப்புரை செய்ய நம்முடைய குழுவிற்கு ஒரு தகவல் தொழில்நுட்ப சமூக வலைதளப் பொறுப்பாளர் நியமனம் செய்ய வைத்து கோரிக்கையை கழகத் தலைவரிடம் அனுமதி பெற்று நியமனம் செய்து கொள்ளத் தீர்மானிக்கப்படு கிறது. ஆதிதிராவிடர் நலக்குழு வளர்ச்சிக்கு மாநில நிர்வாகி களை மண்டல வாரியாக நியமனம் செய்து கொள்ள கழகத் தலைவரிடம் ஒப்புதல் பெற்று அறிவிக்க இக் கூட்டம் தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்ட

# கழக மருத்துவ அணி சார்பில் புதுக்கோட்டையில் ரத்ததான முகாம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கே.கே செல்லப்பாண்டியன் தொடங்கி வைத்தனர்!

புதுக்கோட்டை, ஆக. 16 - முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் நடைபெற்ற ரத்ததான முகாமை கால நிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் துறை

அமைச்சர்சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இந்நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் மு.க.முத்துக்கருப்பன் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் டாக்டர் அமானுல்லா, துணை அமைப்பாளர்கள் டாக்டர் எஸ்.வி.ஆர்.அர்வின் ராஜா, டாக்டர் பிரபாகர் தாஸ், டாக்டர் ஆர். மனோஜ்குமார், டாக்டர் பொன்.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வுகளில் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, புதுக்கோட்டை நகர செயலாளர் ஆ.செந்தில், மாவட்ட துணைச் செயலாளர் க.மதியழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீரை. தமிழ் ராஜா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம், ஒன்றியச் செயலாளர்கள் மு.க.ராமகிருஷ்ணன், குளவாய்ப்பட்டி சி.சண்முகம், ஆர். ஆர்.சாமிநாதன், ரவி, அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் எம்.எம்.பாலு, டாக்டர் செ.குறிஞ்சிவாணன், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், புத்தாம்பூர் எம்.சுப்பையா, எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, மு.கலைஞர் கருணாநிதி, கே.வி.சுப்பையா. வடவாளம் க.செ.மணிமாறன், எஸ்.வி.ஆர்.ராஜா, க.செ.கலியமூர்த்தி, தெய்வாணை, சபா, சதீஷ், கி. சுப்பிரமணியன், ரவீஸ் ரவி, டி.தயாளன், சுந்தர் ராஜ், மெஸ் மூர்த்தி, இதயம் அப்துல்லா, ஆதித்யா துரைராஜா, மெஸ் கார்த்தி, உடையப்பன், முரளி, அன்புநிதி, செல்வக்குமார் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். 100க்கும் மேற்பட்டோர் இரத்த தானம் செய்தனர். இரத்த தானம் செய்த அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

### 18ஆம் தேதி கழகத்தலைவர் தலைமையில் மீனவர்கள் மாநாடு!

# மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 3000த்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் அறிக்கை!



நாகை, ஆக. 16 - மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி காலத்தில் மீனவர்களுக்கு பல்வேறு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் அரசாக உள்ளது. கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது மீனவர்களுக்கு மீன்பிடி தடை காலத்தில் மீனவர்களுக்கு நிவாரணத் தொகையை முதன் முதலில் அறிமுகப்படுத்தி அன்று ரூ. 500 வழங்கி இன்று மீனவர்கள் ரூ. 5000 பெறுகிறார்கள். மீனவர்க ளுக்கு நல வாரியம் அமைக்கப் பட்டது தி.மு.க. ஆட்சியில் தான். சுனாமியின் போது மீனவர்கள் வங்கியில் விசைப் படகுகளுக்காக வாங்கிய கடன் அனைத்தையும் கலைஞர் அவர்கள் அரசே ஏற்கும் என்று அறிவித்து மீனவர்களின் வங்கியில் வாங்கிய கடனை தமிழ்நாடு அரசு வங்கிக்கு செலுத்தி மீனவர்கள் கடன் சுமையை முழுமையாக ஏற்றது. தி.மு.க. ஆட்சியில் மயிலாடுதுறை மாவட்டத்தில் வானகிரியில் ரூ. 66 கோடியில் மீன்பிடி துறைமுகம், சின்ன மேட்டில் ரூ. 10 கோடியில் கடல் அரிப்பை தடுக்க கருங்கற்கள் கொண்டு தடுப்பு சுவர், சின்னங்குடியில் மீன் இறங்கும் தளம் ரூ. 26 கோடியில், சந்திரபாடியில் மீன் இறங்கும் தளம் ரூ. 10 கோடியில், பழையாறு மீன் பிடி துறைமுகம் விரி வாக்கத்திற்கு ரூ. 22 கோடி என மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து மீனவர் கிராமத்திற்கும் பல திட்டங்களை தி.மு.க. அரசு தந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் உள்ள மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகாரை கலைஞர் அவர்கள் சுற்றுலா தலமாக மாற்றியதுடன், 1973ம் ஆண்டு வாக்கில் பூம்புகார், வானகிரி, தாழம் போட்டை உள்ளிட்ட பல்வேறு மீனவ கிராமங்களில் உள்ள மீனவர்களுக்கு வீடுகளை கட்டி கொடுத்ததுடன், மீனவர்களின் வாழ்வாதாரத்தை பெருக்க மீனவர்களுக்கு மானிய விலையில் விசைப்படகுகளை கலைஞர் அவர்கள் வழங்கினார்கள். இப்படி மீனவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும், மீனவர்களின் நலனை பாதுகாக்கும் அரசாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அரசும், தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் அரசு உள்ளது.

ராமநாதபுரம் மண்டபத்தில் மீனவர்கள் மாநாடு வரும் 18.8.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான . தளபதி அவர்களின் தலைமையில் நடைபெறுகிறது. இந்த மீனவர் மாநாட்டில் மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள், கழக மீனவர் அணியினர் 3000த்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திட கேட்டு கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் கூறியுள்ளார்.

### கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றிய தி,மு,க, சார்பில்

# நடுப்பட்டியில் தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - ஆரணி மாலா சிறப்புரை!

புதுக்கோட்டை, ஆக. 16 - நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு துவக்க விழாவினை முன்னிட்டு கந்தர்வக்கோட்டை தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் கொடியேற்று விழா மற்றும் தெருனை பிரச்சாரக் கூட்டங்கள் சமத்துவபுரம் புதுப்பட்டி , பல்லவராயன் பட்டி, நடுப்பட்டி ஆகிய பகுதிகளில் ஒன்றிய கழக செயலாளர் எம்.பரமசிவம் வரவேற்பில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் கழக இரு வண்ணக் கொடியை ஏற்றி வைத்து கழக ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்தார்கள். தலைமை கழக சொற்பொழிவாளர் வழக்கறிஞர் ஆரணி மாலா முத்தமிழறிஞர் கலைஞர் தந்த திட்டங் களை விளக்கி சிறப்புரை யாற்றினார்.

நிகழ்வில் கந்தர்வக்கோட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் மா.தமிழ் ஐயா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் எம்.ராஜா, முனைவர் செ.குறிஞ்சிவாணன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், துணை அமைப்பாளர்கள் இளைஞரணி மு.கலைஞர் கருணாநிதி, மாணவரணி ராயல் ஆர்.சபா, கந்தர்வக்கோட்டை தொகுதி சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர் ராஜராஜன், ஆத்மா தலைவர் நியூஸ் எம்.ராஜேந்திரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.கலையரசன், துணை அமைப்பாளர் அசோக், ஆதித்யா துரைராஜா, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பிரகதிஷ், எம்.எம்.முருகேசன் ஒன்றிய கழக நிர்வாகிகள் சுப்பிரமணியன் , எம்.ரவிச்சந்திரன், எஸ்.கோவிந்தன், ராதிகா கருப்பையன் , த. சரவணன், எம்.ராஜேந்திரன். சு.குஞ்சப்பா. க. ராஜேந்திரன் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### நாங்குநேரி சம்பவம்

# தமிழ்நாடு அரசு முறையாக நடவடிக்கை எடுத்துள்ளது!

## ஆதிதிராவிட பழங்குடியின நலத்துறை ஆணைய உறுப்பினர் பேட்டி!

நெல்லை, ஆக. 16 - நாங்குநேரி சம்பவத்தில் தமிழ்நாடு அரசு முறையான நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆதிதிராவிட பழங்குடியின நலத்துறை ஆணைய உறுப்பினர் ரகுபதி தெரிவித்தார்.

இதுகுறித்து நெல்லையில் நேற்று முன்தினம் அவர் அளித்த பேட்டி வருமாறு:-

நாங்குநேரியில் பள்ளி மாணவன் சின்னத்துரை, அவரது தங்கை வெட்டப்பட்ட சம்பவத்தில் அவரது, வீடு, பள்ளி, ஆசிரியர்கள், சக மாணவ, மாணவிகள், அப்பகுதி பொதுமக்கள், உறவினர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. சின்னத்துரை, அவரது தங்கை மற்றும் தாயிடம் விசாரித்துள்ளோம். நெல்லை மாவட்ட நிர்வாகம், காவல் துறை அதிகாரிகளிடம் விசாரித்ததில், மாவட்ட நிர்வாகமும், காவல்துறையும் முறையாக நடவடிக்கை எடுத்துள்ளது.

குற்றம் செய்தவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கான முதல் காரணம் தாமதமாக தெரிந்ததால் சம்பவத்தை தடுக்க முடியாமல் போனதாக தெரியவருகிறது. முதல்வர் தனிநபர் விசாரணை ஆணையம் அமைத்துள்ளார். எங்களது விசாரணை அறிக்கையை ஆணையத்தில் விவாதித்து அரசுக்கு சமர்ப்பிப்போம். சின்னத்துரை, தங்கை உடல் நலம் தேறியுள்ளனர். தமிழ்நாடு அரசு முறையாக நடவடிக்கை எடுத்துள்ளது. இதேபோல் பிற பள்ளிகளில் சாதிய பிரச்சினைகள் உள்ளதா என்பது குறித்து ஆணையம் விசாரித்து நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.



ஆர். ஜி. மாடர்ன் கல்விக் குழுமம் 13 வது ஆண்டு விழாவில் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ,மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் , தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் துணை வேந்தர் ஆறுமுகம், இந்திய உணவு வழங்கல் துறை இயக்குநர் ஞானமணி, ஆர்.ஜி. மார்டன் கல்வி குழுமம் நிறுவனர் கோவிந்த், தமிழக கல்வியாளர்கள் பேரவை அருணா தொல்காப்பியன், NCS மாவட்ட வேலைவாய்ப்பு ஆலோசகர் நாகலட்சுமி மற்றும் பலர் உடனிருந்தார்கள்.



தாராபுரம் ஒன்றியம், நல்லாம்பாளையம் ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 25 இலட்சம் மதிப்பிலான திட்டப்பணிகளை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் தாராபுரம் ஒன்றிய கழக செயலாளர், ஒன்றியக் குழு பெருந்தலைவர் எஸ்.வி.செந்தில்குமார், துணைத்தலைவர் இ.சசிகுமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சன் பாலு உள்பட பலர் கலந்து கொண்டனர்.


ஆகஸ்ட் 17
மற்றும் 18ல்
தென்மண்டல
பாக முகவர்கள்
பயிற்சி பாசறை மற்றும்
மீனவர்கள் நல மாநாடு
முகவை மண்ணிற்கு
வருகை தரும்
திராவிட நாயகர்
தமிழ்நாடு
முதல்வரே!
வருக. வருக...
அன்புடன் அழைக்கும்
ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் B.Sc., BL.
பிற்படுத்தப்பட்டோர் (ம) கதர் கிராம தொழில் வளர்ச்சி அமைச்சர்
கழக தேர்தல் பணிக்குழு தலைவர்
காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ,
இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர்
இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க.
ARASU ARTS



நாள் : ஆகஸ்ட் 16, புதன்கிழமை,
இடம் : தினமணி டாக்கீஸ் அருகில், மதுரை
மதுரை தெற்கு தொகுதி மக்களின் நீண்டநாள்
கோரிக்கையான உலகப் புகழ்பெற்ற திரைப்பட
பின்னணி பாடகர்,மண்ணின் மைந்தர்
பத்மஸ்ரீ டி.எம்.சௌந்தர்ராஜன் அவர்களுக்கு
மதுரையில் முழு திருவுருவச் சிலை அமைக்க
அனுமதி அளித்து திறந்து வைக்க
மதுரை மாநகருக்கு வருகை தரும்..
சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்யும்
மாண்புமிகு தமிழ்நாடு
முதலமைச்சர்
அவர்களை
மதுரை தெற்கு தொகுதி மக்களின் சார்பில்
நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டு வருக
வருகவென வரவேற்று மகிழ்கிறேன்...
புதூர் மு.பூமிநாதன் M.L.A.,
மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர்

# இந்தி, இந்து, பாரதீயம் - பா.ஜ.க.வின் பிற்போக்கு அரசியலின் புதிய வாய்ப்பாடு!

## ‘மின்னம்பலம்’ இணையதளத்தில் பேராசிரியர் ராஜன் குறை கிருஷ்ணன் சிறப்புக் கட்டுரை!

**பா**ரதீய ஜனதா கட்சி அரசின் அடுத்த அதிரடி நடவடிக்கை குற்றவியல் சட்டங்களை புதிதாக இயற்றுதல். இவற்றிற்கு இந்தி மொழியில் பெயர்களை வைத்துள்ளது மற்றொரு புதிய அம்சம். இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code 1860), குற்றவியல் நடைமுறைச் சட்டம் (Criminal Procedure Code 1898), இந்திய சாட்சிய சட்டம் (Indian Evidence Act, 1872) ஆகிய மூன்றும் இவ்விதம் புதிய சட்டங்களால் பதிலீடு செய்யப்படப் போகின்றன. அவற்றிற்கு சூட்டப்பட்டுள்ள புதிய பெயர்களை முதலில் தெரிந்துகொள்வோம்.

**Indian Penal Code - Bharatiya Nyaya Sanhita**

**Criminal Procedure Code - Bharatiya Nagarik Suraksha Sanhita**

**Indian Evidence Act - Bharatiya Sakshya**




இந்த புதிய சட்டங்களில் என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன, புதிய சட்டங்கள் ஏற்புடையவையா என்பன குறித்து நிறைய விவாதங்கள் இனிவரும் நாட்களில் பொதுக்களத்தில் எதிர்பார்க்கலாம். இப்போதைக்கு நாடாளுமன்றத்தில் இவை தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தொடர்புடைய நாடாளுமன்ற நிலைக்குழுக்கள் இவற்றை விவாதித்து சட்டமாக்கலாமா என கருத்துக் கூறும்.

இவற்றின் உள்ளடக்கங்களைக் குறித்து பேசுவதற்கு முன்னால் சட்டங்களுக்கு வைக்கப்பட்டுள்ள பெயர்களே சர்ச்சைக்குள்ளாகியுள்ளன. பல்வேறு மொழி பேசும் மாநிலங்களை கொண்ட நாட்டில் இவ்வளவு முக்கியமான சட்டங்களுக்கு இந்தி மொழியில் பெயர் வைக்கலாமா என்ற கேள்வி எழுந்துள்ளது. ஏற்கனவே அரசின் நலத்திட்டங்களுக்கு எல்லாம் இந்தி, சமஸ்கிருத பெயர்களை வைத்து இந்தி பேசாத மாநிலங்களை திணறடித்து வருகின்றது பா.ஜ.க. அரசு. இந்த முறை அனைத்து மக்களையும் பாதிக்கக் கூடிய



முக்கியமான சட்டங்களுக்கு இவ்வாறான பெயர்களை வைப்பது மேலும் இந்தி மொழி ஆதிக்கத்திற்கு வழி வகுப்பதாகவே உள்ளது.

### பாரதீய ஜனதா கட்சியின் தோற்றுவாய்

பாரதீய ஜனதா கட்சியின் அடிப்படைக் கொள்கைகள், கோட்பாடுகள் எல்லாம் தெளிவாக சாவர்க்கர், கோல்வால்கர் ஆகியோர் எழுதிய நூல்களில் கூறப்ப ட்டுள்ளன. அவர்களுக்குள் சிறு வேறுபாடுகள் உண்டு என்றாலும் அடிப்படையில் அது இந்து மத அடையாளத்தை தேசத்தின் அடையாளமாக மாற்ற வேண்டும், சமஸ்கிருதமயமான இந்தியை அரசின் மொழியாக, தேசத்தின் மொழியாக மாற்ற வேண்டும் என்பவற்றை அச்சாணியாகக் கொண்டவை.

மொழிவாரி மாநிலங்கள் அமையும்போது அதனை ஆர்.எஸ்.எஸ் கடுமையாக எதிர்த்தது. இந்திய தேசிய அரசு என்பது ஒற்றை அரசாக விளங்கவேண்டும், அதிகாரம் ஒன்றியத்தில் குவிக்கப்பட வேண்டும் என்பதே அதன் நிலைப்பாடாக விளங்கி வந்துள்ளது. அதனால் மாநில உரிமைகள், மாநில சுயாட்சி, கூட்டாட்சி அமைப்பு, இந்திய ஒன்றியம் உள்ளிட்ட சிந்தனைகள் அதன் அடிப்படை இலட்சியங்களுக்கு முரணானவை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

**குறிப்பாக தமிழ் நாடு இந்தி மொழியை மட்டுமே ஒற்றை ஒன்றிய அலுவல் மொழியாக மாற்றுவதை தொடர்ந்து எதிர்த்து வருவது பா.ஜ.க.விற்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது. அதேபோல தமிழ் நாட்டிலுள்ள மதப் பிரிவுகளும் தனித்துவத்துடன் இருப்பதும், இந்து என்ற ஒற்றை அடையாளத்திற்குள் அடக்க முடியாதவையாக இருப்பதும், அவற்றுக்குள்ளேயே பார்ப்பனீய மறுப்பு, எதிர்ப்பு உள்ளடங்கியிருப்பதும் ஒரு சவாலாகவே உள்ளது.**

**அதனால் எவ்வகையிலாவது இந்தி மொழியை நாடெங்கும் பயன்படுத்துவதை நிர்பந்திக்க வேண்டும் என்ற நோக்கத்தில் புதிய சட்டங்களுக்கு இந்தியில் பெயர் வைப்பதை உணர முடிகிறது. ஆனால் அந்த முயற்சியில் உள்ள முரண்பாடுகள் கவனத்திற்குரியவை.**

### இந்தியாவா, பாரதமா?

பாரசீக மொழியில் சிந்த் என்பதை ‘ஹிந்த்’ என்று உச்சரிப்பதில்தான் இந்துஸ்தான் என்ற அடையாளம் இந்திய நிலப்பரப்பிற்கு உருவானது என ஆய்வாளர்கள் பலர் கருதுகிறார்கள். அல் ஹிந்த் என்று அரேபிய மொழியில் வழங்கப்பட்டு, ஹிந்துஸ்தானமாக உறுதிப்பட்டது. இப்படி இந்துஸ்தானத்தில் உள்ளவர்களின் வழிபாடுகள், இறை நம்பிக்கைகள் எல்லாம் இந்து மதம் என்று கருதப்பட்டதில் ஆங்கிலேயர்கள் அத்துடன் இசம் என்பதைச் சேர்த்து ஹிண்டுயிசம் என்ற வரலாற்று மதமாக கட்டமைத்தார்கள். அதற்கடுத்து ஹிந்துஸ்தானத்து மக்கள் பரவலாக பேசிய கலவை மொழியை ஹிந்துஸ்தானி என்றும் அழைத்தார்கள்.

**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*



இந்த இந்துஸ்தானம் என்ற நிலப்பரப்பு, இந்து மதம் என்ற அடையாளம், இந்துஸ்தானி என்ற மொழி ஆகியவை எல்லாம் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை என்ற ஒரு எண்ணம் தேசியவாதிகள் பலர் மனதில் தோன்றியது. ஆங்கிலேய வரலாறு எழுதியதிலும் முஸ்லீம் இந்தியா, இந்து இந்தியா என்று பிரித்து எழுதியதால் பல்வேறு பிரித்துப் பார்க்கும் நடைமுறைகள் தோன்றின. ஹிந்துஸ் தானியில் கலந்திருந்த பர்சிய, உருது சொற்களை பிரித்து சமஸ்கிருத வேர்ச்சொற்களால் நிரப்பி, உருது வேறு, இந்தி வேறு என்று இரு மொழிகள் உருவாக்கப்பட்டன. இந்த இந்தியையே “தேவ”நாகரி வரிவடிவத்தில் எழுதி அதை தேசிய மொழியாக்க வேண்டும் என்று நினைத்தனர்.

இந்த இந்தி மொழி உருவாக்கம் என்பது ஏதோ மொழி சார்ந்த செயல்பாடல்ல. அதுவே இந்திய தேசிய, இந்து அடையாள கட்டமைப்பின் சாரமாகவும் இருந்தது. இந்தி மொழி ஆர்வலர் பிரதாப் நாராயண் மிஸ்ரா என்பவர் 1893ஆம் ஆண்டு எழுதிய ஒரு பாடல் இதனை முழுமையாக உணர்த்துகிறது. அந்த பாடலை ஒருவாறு தமிழில் இப்படி எழுதலாம்:

ஓ பாரதத் தாயின் புதல்வர்களே!

உங்களுக்கு உண்மையிலேயே சிறந்த எதிர்காலம் வேண்டுமானால்

இந்த சொற்களை ஓயாமல் ஜபியுங்கள்

இந்தி, இந்து, இந்துஸ்தான்!

இப்படி மக்களிடையே நிலைபெற்றுவிட்ட இந்துஸ்தான் என்ற பிரதேச அடையாளம், தேசிய இயக்கத்தின் போது இந்தியா என்று சுருக்கப் பட்டாலும் அது இந்தி, இந்து ஆகிய இரண்டு சொற்களுடன் இணக்கமாகவே இருந்ததால் பெரிதாக எதிர்க்கப்படவில்லை. இந்து, இந்தி, இந்தியா எல்லாம் ஒன்றாகத்தானே ஒலிக்கின்றன.

ஒரு சில இந்து தேசியவாதிகள் இந்தியா என்பது அன்னியர் வைத்த பெயர், நாமே சூடிக்கொண்ட பெயர் பாரதம் என்பதுதான் என்று கூறினாலும், அதற்கு அதிகம் அழுத்தம் கொடுக்கப்படவில்லை. ஆனால் பல துணை அமைப்புகளுக்கு “பாரதீய” என்ற அடைமொழியை சங் பரிவாரத்தில் கொடுப்பார்கள். ஜன சங்கம் ஜனதா கட்சியில் ஐக்கியமாகி, பின்னர் பிரிந்து வெளியேறிய போது அதற்கு பாரதீய ஜனதா கட்சி என்று பெயர் வைத்தார்கள்.

**இப்போது மீண்டும் ஒரு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எதிர்கட்சிகளின் கூட்டணிக்கு இந்தியா என்று சொல்லும்படி Indian National Developmental Inclusive Alliance, I.N.D.I.A என்று பெயர் வைத்துவிட்டார்கள். இப்போது இந்தியா என்ற சொல் மீண்டும் அலர்ஜியாகிவிட்ட து பா.ஜ.க.விற்கு. பாரதீயத்தின் மேல் புதிய ஈடுபாடு வந்துள்ளது. அதனால் குற்றவியல் சட்டங்களில் இருந்த இண்டியன் என்ற வார்த்தையை நீக்கி பாரதீய என்று தொடங்கும் இந்தி/ சமஸ்கிருத பெயர்களை சூட்ட முற்படுகின்றனர்.**

### ஒன்றியத்தின் அலுவல் மொழியாக ஆங்கிலமே நீடிப்பதில் என்ன தவறு?

ஆங்கிலம் உலகில் பெரும்பாலோர் பேசக்கூடிய, பேசாதவர்களும் தொடர்பு மொழியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையை இருபதாம் நூற்றாண்டில் எட்டிவிட்டது. இதற்கு முக்கிய காரணம் உலக பொருளாதாரத்தின் மையமாக விளங்கும் அமெரிக்கா ஆங்கிலம் பேசும் நாடாக இருப்பதுதான். இது சைனா, ஜப்பான் போன்ற நாடுகளையும் தொடர்பு மொழியாக ஆங்கிலம் கற்க வகை செய்கிறது. இந்தியா பதினெட்டாம்நூற்றாண்டிலிருந்தே ஆங்கிலம் பயின்று வருவதால், இந்தியர்கள் கணிசமான அளவில் அமெரிக்காவில் குடியேறி, அங்கு தேசிய வாழ்வில் அவர்கள் சந்ததியினர் பங்கேற்று வருகின்றனர். பிரிட்டிஷ் பிரதமராக, அமெரிக்க துணை ஜனாதிபதியாக இந்திய வம்சா வழியினர் பதவி வகித்து வருகின்றனர் என்பது நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம்.

கடந்த எழுபது ஆண்டுகளில் இந்தியாவில் கோடிக்கணக்கானவர்கள் ஆங்கிலம் பயின்றுள்ளார்கள். இந்திய மொழிகள் அனைத்திலும் அன்றாட வழக்கில் கணிசமான ஆங்கில சொற்கள் கலந்துள்ளன என்பது மட்டுமன்றி, கிராமப்புறங்களிலும் கூட ஆங்கில பதங்கள் பரவலாக பயன்படுத்தப் படுகின்றன. சேதன் பகத் போன்ற ஆங்கில நாவலாசிரியர்களின் நாவல்கள் இலட்சக்கணக்கான பிரதிகள் இந்தியா முழுவதும் விற்றுத் தீர்க்கின்றன. ஹாலிவுட் படங்கள் இந்தியாவெங்கும் அரங்கு நிரம்பிய காட்சிகளாக ஓடுகின்றன. ஆங்கிலம் இந்தியாவிற்கு அன்னிய மொழி என்பதெல்லாம் அர்த்தமற்ற பேச்சு.

**இந்தியாவின் அலுவல் மொழி, தொடர்பு மொழி பிரச்சினையை ஆங்கிலத்தை கொண்டு தீர்ப்பதுதான் அறிவுடமை. அதனால் ஏராளமான நன்மைகள் உள்ளன. உள் நாட்டு தொடர்பு மொழியே சர்வதேச தொடர்பு மொழியாக அமையும்போது நம்மால் சுருங்கிவரும் உலகில் சிறப்பாக இயங்க முடியும். உச்ச நீதிமன்றத்தின் அலுவல் மொழியாக ஆங்கிலம் இருந்தால், அது சர்வதேச சட்டங்களையும், நீதிபரிபாலன வரலாற்றையும் சுலபமாக தொடர்பு படுத்திக்கொள்ள முடியும்.**

**நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கு நாம் அன்னிய முதலீட்டையே நம்பியுள்ளோம். தேசத்தின் பாதுகாப்பிற்கு அன்னிய ராணுவ தளவாடங்களை நம்பியுள்ளோம். அமெரிக்காவுடன் நல்லுறவைப் பேண எந்த சமரசங்களையும் செய்து கொள்கிறோம். அமெரிக்க இறக்குமதி பொருட்களால் சந்தையை நிரப்புகிறோம். இதிலெல்லாம் இல்லாத அடிமைத்தனம், ஆங்கில மொழியை பயன்படுத்துவதால் மட்டும் வந்துவிடப் போவதில்லை.**




கணினியுகமும், செயற்கை நுண்ணறிவும் மொழியாக்கத்தை மேலும், மேலும் சுலபமாக்கப் போகின்றன. இந்த நேரத்தில் இந்தி மொழி பேசாத ஐம்பது, அறுபது கோடி இந்தியர்கள் மீது இந்தி பெயர்களை திணிப்பது என்பது காலனீய மனோபாவமே தவிர வேறொன்றில்லை. ஆங்கிலம் இன்றைக்கு காலனீய மொழியில்லை. அந்த நாலைந்து தலைமுறையாக பரவலாக இந்தியர்கள் பயின்று வரும், பயன்படுத்தும் மொழி. ஆனால் இந்தி மொழி பேசாதவர்கள் அந்த மொழியை அரசு அலுவல் மொழியாக பயன்படுத்துவது தங்களை இரண்டாம் நிலை குடிமக்களாக்கிவிடும் என்றுதான் கருதுவார்கள். அது தேசத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு சிறிதும் நன்மை செய்யக்கூடியதல்ல.

பாரதீய ஜனதா கட்சி இந்தி, இந்து, இந்துஸ்தான் என்பதை இந்தி, இந்து, பாரதீயம் என்று மாற்றுவதால் பிற்போக்கு சிந்தனையை முற்போக்கானதாக மாற்ற முடியாது. இந்தியா பன்மைத்துவத்தின் ஊற்றாக, பன்மையை தன் உள்ளுறை ஆற்றலாக உணர்ந்துவிட்டது. அதையே வளர்ச்சியின் ஊற்றுக்கண்ணாக பார்க்கிறது. காலத்திற்கு பொருந்தாத “இந்தி, இந்து, இந்துஸ்தான்” என்ற பழமைவாத கோஷத்தை பா.ஜ.க. முன்னெடுப்பது நல்லதல்ல.

**புதிய சட்டங்களின் உள்ளடக்கங்களை விவாதிக்கும் முன்னால், முதலில் அவற்றின் பெயர்களை மாற்ற வேண்டும். அனைத்து இந்தியர்களுக்கும் இணக்கமான பெயர்கள் வேண்டும். பாரதீய ஜனதா கட்சிக்கும் இந்தியா கூட்டணிக்குமான முரண்பாடும், போராட்டமும் பல முனைகளிலும் தீவிரமடைவது காலத்தின் கட்டாயம்.**

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்

# தலைமைச் செயலக மொழி பெயர்ப்புப் பணியில் சேர்ந்த அலுவலர்களுக்கு ஆங்கிலப் பயிற்சிக்கான சான்றிதழ்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்!

*சென்னை, ஆக. 16 -*

2022ஆம் ஆண்டில் அக்டோபர், நவம்பர் ஆகிய திங்கள்களில் நடைபெற்ற ஆங்கில பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்த தலைமைச் செயலகத்தின் மொழிபெயர்ப்புப் பிரிவைச் சேர்ந்த 2 துணை இயக்குநர்கள், 4 பிரிவு அலுவலர்கள் மற்றும் 12 உதவிப் பிரிவு அலுவலர்களுக்கு பிரிட்டிஷ் கலை நிறுவன ஆங்கிலப் பயிற்சிக்கான பாராட்டுச் சான்றிதழ்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சென்னை, தலைமைச் செயலகத்தில் வழங்கிச் சிறப்பித்தார்.

இந்த அறிவிப்பு 2018-2019ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிவிப்பாகும். கொரோனா பெருந்தொற்றை முன்னிட்டு இப்பயிற்சி பல நிலைகளில் ஒத்திவைக்கப்பட்டது. மேலும், இப்பயிற்சிக்கு தமிழ்நாடு அரசு ரூ.8,07,000/ நிதியுதவி அளித்துள்ளது. பின்னர் அமைச்சர் தன் உரையில், “கல்வி கற்பதால் ஒருவர் பெறும் அனுபவமும் ஆற்றலும் கற்றல் ஆகும் என புகழ் பெற்ற ‘வெப்ஸ்டெர் ‘ என்ற அகராதி கூறுகிறது என்றும் கற்றல் திறனைப் பெறுபவர் தங்கள் நடைமுறை வாழ்க்கையுடன் பொருந்தி வாழும் வல்லமையைப் பெறுவர்.” என்றும் குறிப்பிட்டார் மேலும், “யாமறிந்த மொழிகளிலே” என்று தொடங்கித் தமிழின் புகழ் பாடிய மகாகவி பாரதியார் பதினெட்டு மொழிகள் அறிந்திருந்தார். இதன் காரணமாகவே, அவர் தமிழ் மொழி குறித்து கூறிய கருத்துகள் வலுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. சுந்தரத் தெலுங்கு மட்டுமல்லாமல் அவர் கற்ற திராவிட, ஐரோப்பிய மொழிகள் அவரின் சிந்தைக்கு கூடுதல் பலம் சேர்த்திருந்தன.” என்றும், “ஒரு முறை முத்தமிழறிஞர் கலைஞர் தன்னுடைய உரையில், தன்னை வளர்த்த பேரறிஞர் அண்ணா, ஆங்கிலத்தில் பேசும் முறையை குறித்து பேசியது என் நினைவிற்கு இப்பொழுது வருகிறது.

அண்ணா சொன்னாராம் *I Speak English rarely but that does not mean my English is rare and I am proud to belong to the Dravidian stock* அந்த வகையில், ஆங்கில மொழியை பயிற்றுவதில் பல்வேறு நிலைகளை வகுத்து, அதை மாணவர்களுக்கும், தனியார் மற்றும் அரசுப் பணியாளர்களுக்கும் சென்னை பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனம் சிறப்பான வகையில் தொடர்ந்து பல ஆண்டுகளாக பயிற்றுவித்து வருவதை நான் நன்கறிவேன். அந்நிறுவனத்திற்கு என்னுடைய பாராட்டை தெரிவித்துக் கொள்கிறேன்.” என்றும் குறிப்பிட்டார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் ஓர் அங்கமான மொழிபெயர்ப்புத் துறையில், பள்ளி வழியாக 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயின்ற 9 மொழி பெயர்ப்பாளர்கள் உள்ளிட்ட 20 மொழிபெயர்ப்பாளர்கள் தங்களின் ஆங்கில மொழித் திறனை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு, சிறப்பான தொரு பயிற்சியினை பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவனத்தில் நிறைவு செய்துள்ளார்கள். அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப் பணியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசு பல்வேறு பயிற்சிகளை அளித்து வருகிறது. அதன் வெளிப்பாடாகவே இந்த ஆங்கில பயிற்சி அமைந்துள்ளது”. என்று தன் தலைமை உரையில் குறி ப்பிட்டார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் அரசு செயலாளர் தன் உரையில், மொழி வளம் குறித்தும், மொழிபெயர்ப்பாளர்களுக்கு ஆங்கில மொழி நுட்பத்தை அறிந்து கொள்வது எத்துணை அவசியம் என்றும் வலியுறுத்திக் கூறினார்.

பிரிட்டிஷ் கலை நிறுவனத்தின் தென்னிந்திய இயக்குநர் திருமதி ஜனகா புஷ்பநாதன் தன்னுடைய உரையில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் தான், பிரிட்டிஷ் கலை நிறுவனத்திற்கு வருகை புரிந்த ஒரே தமிழ் நாட்டு முதலமைச்சர் என்று குறிப்பிட்டதுடன், அரசு அலுவலர்கள் அனைவரும் மென்மேலும் இப்பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெற அழைப்பு விடுத்தார்.

இவ்விழாவிலேயே தமிழ் வளர்ச்சித் துறை தொடர்ந்து வெளியிட்டு வரும் ஆட்சி சொல் அகராதியினை செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் வாயிலாக மூன்று பகுதிகளாக தமிழ்நாடு அரசு அச்சகத்தின் வாயிலாக அச்சிடப்பட்டு இன்று காலை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது. முதல் பிரதியினை அரசு செயலாளர் பெற்றுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மருத்துவர் இரா. செல்வராஜ், தமிழ் வளர்ச்சி மற்றும் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர், முனைவர் ந.அருள், பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவன இயக்குநர் திருமதி ஜனகா புஷ்பநாதன், பிரிட்டிஷ் கலை நிறுவன முதுநிலை ஆசிரியை திருமதி கிருபா இரகுராம், தகவல் தொழில்நுட்ப முதுநிலை மேலாளர் ரேட்லி இம்மானுவேல் மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்கான ஒருங்கிணைப்பாளர் திருமதி லதா பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

### இந்தியாவிலேயே தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையை முதலிடத்துக்குக் கொண்டு வந்த அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு நன்றி!

# முதல்வர் தலைமையில் தமிழ்நாட்டிற்கு 'நீட்' விலக்கு பெற்றே தீருவோம்!

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி தமிழகமெங்கும் மாணவர் அணி சார்பில் பேச்சு - கட்டுரை உள்ளிட்ட போட்டிகள்!

### மாணவர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்! மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் அறிவிப்பு!

**சென்னை, ஆக. 16–**

**சென்னை – அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் நேற்று காலை கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் தலைமையில் நடைபெற்ற, தி.மு.க. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் – இந்தியாவிலேயே தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையை முதலிடத்துக்கும் கொண்டு வந்துள்ள இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**மேலும் முதல்வர் அவர்களின் தலைமையில், தமிழ்நாட்டிற்கு 'நீட்' விலக்கு பெற்றே தீருவோம் எனவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை தமிழ்நாடெங்கும் கழக மாணவரணி சார்பில் பேச்சுப் போட்டி, கட்டுரை போட்டி உள்ளிட்ட போட்டிகள் நடத்திக் கொண்டாடுவது எனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டதாக கழக மாணவரணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.**

அதன் விபரம் வருமாறு:

தி.மு.க. மாணவர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (14.8.2023 திங்கட்கிழமை) காலை 10.30 மணியளவில், சென்னை, "அண்ணா அறிவாலயத்தில்" உள்ள கழக அலுவலகத்தில், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ., தலைமையில், அணியின் தலைவர் இரா.ராஜீவ்காந்தி, இணைச் செயலாளர்கள் பூவை சி.ஜெரால்டு, எஸ். மோகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கலந்தாலோசனை கூட்டத்தில், அணியின் துணைச் செயலாளர்கள் மன்னை த. சோழராஜன், சேலம் ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம். ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி.கோகுல், பூர்ண சங்கீதா சின்னமுத்து ஆகியோர் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:

**"மாணவ நேசன் -பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகள்!**

தமிழே உயிராக, தமிழினமே உணர்வாக, தமிழர் நலனும் - தமிழ்நாட்டின் வளர்ச்சியுமே வாழ்நாள் செயல் திட்டமாகக் கொண்ட ஒய்வில்லாச் சூரியன்; தனது 94 ஆண்டு ஆயுட்காலத்தில் 80 ஆண்டு கால பொதுவாழ்க்கைக்குச் சொந்தக்காரர்; ஒரு நூற்றாண்டுகால திராவிட இயக்க வரலாற்றில் முக்கால் நூற்றாண்டு காலப் பங்களிப்பாளர்; அரை நூற்றாண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருந்து தமிழ்நாட்டுஅரசியலின் அச்சாணியாகச் செயல்பட்டவர்; களம் கண்ட 13 தேர்தல்களிலும் வெற்றி கண்ட சாதனையாளர்; ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப் பேற்று மாநிலத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் நலன் விளைவிக்கும் திட்டங்களை வழங்கியவர்; இந்திய ஜனநாயகக் காவலராகத் திகழ்ந்த மூத்த அரசியல் தலைவர்; இலக்கியம் கவிதை இதழியல் நாடகம் திரைப்படம் எனத் தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரை பதித்த பன்முகத்திறன் கொண்ட படைப்பாளர்; திருக்குவளையில் பிறந்து திருவாரூரில் வளர்ந்து உலகெங்கும் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் நிறைந்த நம் 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நமக்களித்த பணிகளை சிறப்பாகச் செய்திடும் வகையில், பேச்சு, எழுத்து என இரண்டிலும் தனி அடையாளத்துடன் வாழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞரின் சிறப்புகளை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களிடம் வளர்த்தெடுக்கும் வகையில், மாவட்டந்தோறும் பள்ளி மற்றும் கல்லூரி அளவிலான பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி நடத்தி, அதில் தேர்வாகிறவர்களுக்கு நிறைவாக மாநில அளவில் "மாணவ நேசன் - முத்தமிழறிஞர் கலைஞர் 100 பேச்சும் எழுத்தும்" எனும் தலைப்பில் பேச்சு மற்றம் கட்டுரைப் போட்டிகளை நடத்துவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

**"மாணவ நேசன் - முத்தமிழறிஞர் கலைஞர் 100 கவியரங்கம்!**

மாணவப் பருவத்தில் தொடங்கி தனது இறுதி மூச்சு வரையிலும், தமிழ் மொழி, தமிழினம், சுயமரியாதை, சமூகநீதி, மாநில உரிமை உள்ளிட்ட கொள்கைகளை தாங்கிப் பிடித்து உயர்த்திய உன்னதத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிறப்புகளை பள்ளி மற்றும் கல்லூரி மாணவச் சமுதாயம் பெருமளவில் அறிந்திடச் செய்யும் வகையில் பல்வேறு தலைப்புகளில் "முத்தமிழறிஞர் கலைஞர் 100 கவியரங்கம்" நடத்துவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**மீண்டும் உதயமாகும் "தமிழ்நாடு மாணவர் மன்றம்"!**

திராவிட இயக்கத்தின் கொள்கைப் பாதையில் மாணவர்களை ஒன்றிணைத்து, தாய் தமிழ் மொழிக்கு ஆபத்து என்று வந்த போது, இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டத்தில் தன்னுடன் பயின்ற பள்ளி நண்பர்களை ஒருங்கிணைத்து, 'இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பு' என்ற இயக்கத்தைத் தொடங்கி அதன் மூலம் இந்தி எதிர்ப்புப் பேரணிகளையும் இந்த அமைப்பின் மூலம் நடத்தினார். மேலும், தனது 17 வயதில், 'தமிழ்நாடு மாணவர் மன்றம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி, அதன் தலைவராகவும் தேர்வு செய்யப் பட்டார். முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய தமிழ்நாடு மாணவர் மன்றமே, திராவிட இயக்கத்தின் முதல் மாணவர் அணி என்ற சிறப்பைப் பெற்றது. நமது கழகத்தின் மூத்த முன்னோடிகளாக இருந்து நம்மை வழிநடத்திய பேராசிரியர் பெருந்தகை க.அன்பழகன், நாவலர் இரா.நெடுஞ்செழியன், கே.ஏ. மதியழகன் உள்ளிட்ட திராவிட இயக்க முன்னோடிகள் இந்த அணியில் இணைந்து செயல்பட்டுள்ளனர்.

பெருமைமிகு கலைஞர் நூற்றாண்டில் வாழ்ந்து வரும் நமக்கு, மீண்டும் தமிழ்நாடு மாணவர் மன்றத்தை உருவாக்கிடும் பொன்னான வாய்ப்பினை நமது கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் நமக்கு அளித்துள்ளார். அவரது ஆணைப்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் "தமிழ்நாடு மாணவர் மன்றம்" உருவாக்கிட இக்கூட்டத்தில் தீர்மானிக்கப் படுகிறது.

கல்லூரிகளில் பயிலும் திராவிட இயக்கச் சிந்தனை கொண்ட மாணவர்களை ஒன்றிணைத்து, அரசியல் சார்பற்று கல்லூரி மாணவர்களின் தேவைகளை, பிரச்சனைகளையும் பூர்த்தி செய்யும் வண்ணம் செயல்படவும், தமிழ் மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் கலை உணர்வு, தமிழினத் தொன்மையும், பெருமைகளையும் இளைய தலைமுறையினர் அறியும் வண்ணம் செயல்படவும், பகுத்தறிவு சுயமரியாதை சமூகநீதி சமத்துவம் ஆகிய கொள்கைகளை கருத்தியல் பரப்புரை செய்திடவும், மேலும் மாணவர்களிடம் திறன் மேம்பாட்டினை உருவாக்க பயிற்சிகளும், ஊக்குவிக்கும் வகையில் போட்டிகளையும் நடத்திடும் வகையில் இம்மன்றம் செயல்படும்.

மேலும், மாணவர் அணியின் நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்புகளின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நேர்காணலுக்கு செல்லுகின்ற தலைமைக் கழக மாணவர் அணி நிர்வாகிகள், அந்தந்த மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளில் மற்றும் கல்லூரி விடுதிகளில் தமிழ்நாடு மாணவர் மன்றம் வருவாக்கிடும் பணியினை துவக்கி வைத்திடவும், மாணவர் அணியின் சார்பில் வழங்கிடும் படிவத்தை பெற்று உறுப்பினர் சேர்க்கை துவக்கிடவும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**விளையாட்டுத்துறை முதலிடம் இளந்தலைவருக்கு நன்றி!**

விளையாட்டுத் துறையில் ஆண்டுதோறும் 'முதலமைச்சர் கோப்பை' என்ற பெயரில் மாவட்ட, மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. கழகத் தலைவர்முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான 'திராவிட மாடல் அரசு' ஆட்சிக்கு வரும் வரை 21 வயதுக்குட்பட்டோர் மட்டும் 10 விளையாட்டுகளில் கலந்துக் கொள்ளும் வகையில் போட்டிகள் நடைபெற்று வந்தன. ஆனால், முதன்முறையாக 202223ஆம் ஆண்டுக்கான 'முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள்' பள்ளி, கல்லூரி, பொதுப்பிரிவு, அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் என ஐந்து பிரிவுகளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதாக முடிவு செய்யப்பட்டு, தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்கான சிலம்பம், கபடி ஆகிய விளையாட்டுக்களும் இடம் பெற்றுள்ளது கூடுதல் சிறப்பாக அமைந்தது.

இப்போட்டிகளை நடத்துவதற்கு ரூ.50 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் போட்டிகளை நடத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 3 லட்சத்து 70 ஆயிரம் வீரர்கள் - மாவட்ட, மண்டல அளவில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்றுள்ளனர். 27 ஆயிரத்து 411 வீரர்கள் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்று ள்ளனர். கூடுதல் சிறப்பம்சமாக 12 ஆயிரம் ஊராட்சிகளிலிருந்து வீரர், வீராங்கனையர் இந்தப் போட்டிகளில் கலந்துக் கொண்டு மிகச்சிறப்பாக 'முதலமைச்சர் கோப்பை - 2023' போட்டிகள் நிறைவடைந்துள்ளது.

இந்தியாவில் விளையாட்டுத் துறையை முதலிடத்திற்கு கொண்டு வர வேண்டுமென்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவை நிறைவேற்றும் வகையில், திராவிட மாடல் அரசை வழிநடத்தும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, விளையாட்டுத் துறை அமைச்சராக பொறுப்பேற்ற குறுகிய காலத்திலேயே இந்தியா துணைக் கண்டத்தில் விளையாட்டுத் துறையின் தலைநகரமாக தமிழ்நாட்டை கட்டமைத்துக் கொண்டிருக்கு ம் கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கழக மாணவர் அணியின் இக்கூட்டம் பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

**மணிப்பூர் கலவரம்!**

இந்திய நாட்டின் வடகிழக்கு பகுதியில் உள்ள மணிப்பூர் மாநிலத்தில் கடந்த மூன்று மாதங்களாக நடந்து வரும் இன கலவரத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் பல வழிகளில் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இது மிக பெரிய மனித உரிமை மீறல் செயலாக இருந்தும் மணிப்பூரில் அமைதி நிலை நாட்டும் முயற்சியை மணிப்பூர் மாநில பா.ஜ.க. அரசும் மற்றும் ஒன்றியத்தில் ஆளும் பாசிச பா.ஜ.க. அரசும் மேற்கொள்ளாமல் அலட்சியம் காட்டி வருகிறது. மேலும், இந்தியப் பிரதமரும் இச்சம்பவம் குறித்து வாய்திறவாமல் மௌனம் சாதித்து வருவதற்கு கழக மாணவர் அணியின் இக்கூட்டம் வன்மையாக கண்டங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

இதனால், லட்சக்கணக்கான பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களும் தங்களது கல்வியை தொடர முடியாத சூழலில், பெரும் அச்சத்திலும், பதற்றத்திலும், மனஉளைச்சலிலும் இருந்து வரும் சூழலை மாற்றி, பாதிக்கப்பட்ட மக்களுக்கும், மாணவர்களுக்கும் உரிய நிவாரணம் கிடைக்க வழிவகை செய்திடவும், பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் கல்வியை தொடர உடனடி நடவடிக்கை மேற்கொள்ள மாணவர் அணியின் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**நீட்: ஆளுநருக்கு கண்டனங்கள்!**

தமிழ்நாட்டு மக்களின் உணர்வை பிரதிபலிக்கும் வகையில், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நீட் விலக்கு மசோதா நிறைவேற்றப்பட்டு, அது நீண்ட காலமாய் குடியரசுத் தலைவரிடம் நிலுவையில் உள்ள சூழ்நலையில் தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், நீட் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றிருந்த மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர் பங்கேற்றிருந்தனர். அந்நிகழ்வில், ஒரு மாணவரின் பெற்றோர் ஒருவர் ஆளுநரிடம், "நீட் விலக்கு மசோதாவுக்கு எப்போது ஒப்புதல் கொடுப்பீர்கள்?" என கேட்டுள்ளார். அதற்கு, தனக்கு அதிகாரம் இல்லாத நிலையிலும் தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என். ரவி அவர்கள், நான் ஒருபோதும் நீட் விலக்கு மசோதாவுக்கு ஒப்புதல் கொடுக்க மாட்டேன் என்ற மதிகெட்ட... ஆணவப் பேச்சுக்கு தி.மு.க. மாணவர் அணி வன்மையாக கண்டிக்கிறது.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரில் நீட் தேர்வு விலக்கு தொடர்பாக உரையாற்றும் போது குறிப்பிட்டதைப் போல, நீட் விலக்கு தடை மசோதாவிற்கு சட்டப் போராட்டம் போதாது, மக்கள் இயக்கமாய் மாறும் போது தான் நிறைவேற்றப்படும் எனச் சொன்னது எதைக் காட்டுகிறதென்றால், மேலே குறிப்பிட்ட சம்பவம் ஒரு எடுத்துக் காட்டாக உள்ளது.

மிக விரைவில் இது தமிழ்நாடு முழுவதும் தீயாய் பரவும், மக்கள் இயக்கமாய் மாறும். கழகத் தலைவர்முதலமைச்சர் அவர்களின் தலைமையில், தமிழ்நாட்டிற்கு நீட் விலக்கு பெற்றே தீருவோம் என மாணவர் அணியின் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

**பள்ளி, கல்லூரி மாணவர்கள் சகோதர உணர்வுடன் பழகிடுவீர்!**

சமீபத்தில் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரியில் பள்ளி மாணவன் மற்றும் அவரது குடும்பத்தினர் சக மாணவர்களால் மிகக் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட சம்பவம் தமிழ்நாட்டு மக்கள் அனைவரையும் மிகவும் அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியது. சாதி, மத பேதங்களை கடந்து அனைவருக்கும் அனைத்துமான ஒரு சமூகநீதி சமுதாயத்தை கட்டமைத்து கொண்டிருக்கும் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான ஆட்சியில், மாணவச் செல்வங்கள் கல்வியில், தனித் திறனில் சிறந்து விளங்க எண்ணற்ற திட்டங்களான நான் முதல்வன், புதுமைப் பெண், பல்வேறு திறன் மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இளைய சமுதாயத்தினர் சாதி, இன உணர்வு பரவியிருப்பது எதிர்காலத் தமிழ்நாட்டின் எதிர்கால நலனுக்கு உகந்ததல்ல. பேசும் மொழியால் நாம் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்பதை உணர்ந்து, பள்ளிக் கல்லூரி மாணவச் செல்வங்கள் சகோதர உணர்வுடன் பழகிட வேண்டுமென கழக மாணவர் அணியின் இக்கூட்டம் அன்பான வேண்டுகோளை மாணவச் சமுதாயத்திடம் முன் வைக்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட தாக, மாணவரணியின் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாவட்டம், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், காணக்கிளியநல்லூரில் தேசிய கிராம சுயாட்சி திட்டத்தின்கீழ் ரூ.23.56 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடத்தினை நேற்று முன்தினம் (14.08.2023) திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தேவநாதன், இலால்குடி வருவாய் கோட்டாட்சியர் த.சிவசுப்ரமணியன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி.கங்காதாரிணி, ஒன்றிய பெருந்தலைவர் திருமதி.ரஷியாகோல்டன் ராஜேந்திரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் எஸ்.ரவிச்சந்திரன், எஸ்.ராஜேந்திரன், காணக்கிளியநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.சிங்கராயர், முன்னாள் தலைவர் ஆர்.ராஜமாணிக்கம், அரசுத்துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் ஒன்றியம், திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.எம்.மஞ்சுளா, வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், ஒன்றியக்குழு உறுப்பினர் அழகு (எ) சிதம்பரம், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### 18-ம் தேதி கழகத்தலைவர் தலைமையில் நடைபெறும் மீனவர்கள் மாநாடு!

# நாகை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 3000 பேர் பங்கேற்க வேண்டும்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!

நாகை. ஆக.16

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக்ததலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-



தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி காலத்தில் மீனவர்களுக்கு பல்வேறு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் அரசாக உள்ளது. கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது மீனவர்களுக்கு மீன் பிடி தடை காலத்தில் மினவர்களுக்கு நிவாரணத் தொகையை முதன் முதலில் அறிமுகப்படுத்தி அன்று ரூ. 500 வழங்கி இன்று மீனவர்கள் ரூ. 5000 பெறுகிறார்கள். மீனவர்களுக்கு நலவாரியம் அமைக்கப்பட்டது தி.மு.க. ஆட்சியில் தான். சுனாமியின் போது மினவர்கள் வங்கியில் விசைப் படகுகளுக்காக வாங்கிய கடன் அனைத்தையும் கலைஞர் அவர்கள் அரசே ஏற்கும் என்று அறிவித்து மீனவர்களின் வங்கியில் வாங்கிய கடனை தமிழ்நாடு அரசு வங்கிக்கு செலுத்தி மீனவர்கள் கடன் சுமையை முழுமையாக ஏற்றது கலைஞர் அரசு. மீன் வளர்ச்சிக் கழகத்தை தொடங்கிவைத்தது. தி.மு.க. ஆட்சியில் இப்படி தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக அமைத்தது, மீனவர்களுக்கு காங்கிரட் வீடுகள் சாம்ந்தாம்பேட்டை ரூ 40 கோடியில் சிறு துறை முகம், நம்பியார் தடுப்பு சுவர் ரூ.10 கோடியில் புயல் பாதுகாப்பு அரன், கீச்சாங்குப்பத்தில் ரூ,7 கோடியில் தடுப்பு சுவார் வேளாங்கண்ணி ஏலக்கூடம் ரூ3 கோடியில், வேதாரண்யம் வளவனார் ஆற்றை ரூ.10 கோடியில் தூர் வாரிட வும், நம்பியார் நகர், ஆர்காட்டுதுறை, மூவர்கரையில் 3 ஐஸ்பி ளாண்டுகள், நம்பியர் நகர், வெள்ளப்பளம் ஆகிய மீனவர் கிராமத்தில் டீசல் பம்பு அமைத்தும், வேளாங்கண்ணியில் மீன் விற்பனை கடைகள் என தி,மு..க ஆட்சியில் பல கோடி நிதி திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளது. தி.மு.க. ஆட்சியில் தான் மீனவர்கள் நலன் பாதுகாக்கவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது. மீனவர்களுக்கு என ராமநாதபுரம் மண்டபத்தில் மீனவர்கள் மாநாடு வரும் 18.8.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான . தளபதி அவர்களின் தலைமையில் நடைபெறுகிறது. இந்த மீனவர் மாநாட்டில் நாகை மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள், மீனவ சொந்தங்கள் கழக மீனவர் அணியினர் 3000த்திற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திட கேட்டு கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் கூறியிள்ளார்.

மீனவர்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும், மீனவர்களின் நலனை பாதுகாக்கும் அரசாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் அரசும், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு உள்ளது.

ராமநாதபுரம் மண்டபத்தில் மீனவர்கள் மாநாடு வரும் 18.8.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான . தளபதி அவர்களின் தலைமையில் நடைபெறுகிறது. இந்த மீனவர் மாநாட்டில் நாகை மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள், மீனவ சொந்தங்கள் கழக மீனவர் அணியினர் 3000த்திற்கும் மேற்பட்ட வர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திட கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு, அவர் கூறியிள்ளார்.



நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம் கிராமம், ஆலாம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட சின்னாகவுண்டம்பாளையம் பகுதியில் தீ விபத்தினால் சேதமடைந்த வீடுகளை பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக வீடு அமைப்பதற்கு உத்தரவு மற்றும் நிவாரணப் பொருட்களை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மருத்துவ அணி சார்பில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் மு.க.முத்துக்கருப்பன் தலைமையில் புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் நடைபெற்ற ரத்த தான முகாமை காலநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வுகளில் எம்.எம்.அப்துல்லா எம்.பி, டாக்டர் வை. முத்துராஜா எம்.எல்.ஏ, ஆ.செந்தில், க.மதியழகன், கீரை. தமிழ் ராஜா, சு.சண்முகம், மு.க.ராமகிருஷ்ணன், குளவாய்ப் பட்டி சி.சண்முகம், ஆர்.ஆர்.சாமிநாதன், எம்.எம்.பாலு, டாக்டர் செ குறிஞ்சிவாணன், வி.ஜி.ஆர். மணிவண்ணன், புத்தாம்பூர் எம்.சுப்பையா, எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, மு.கலைஞர் கருணா நிதி, டாக்டர் அமானுல்லா, டாக்டர் எஸ்.வி.ஆர்.அர்வின் ராஜா, டாக்டர் பிரபாகர் தாஸ், டாக்டர் ஆர்.மனோஜ்குமார், டாக்டர் பொன்.சரவணன், வடவாளம் க.செ.மணிமாறன் மற்றும் கழக நிர் வாகிகள் பங்கேற்றனர்.

## பேராசிரியர் முனைவர் மா.நன்னன் நூல்கள் நாட்டுடைமை!

# ரூ.10 லட்சத்திற்கான நூலுரிமைத் தொகை!

## மா.நன்னன் துணைவியாரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஆக. 16 -**

**பேராசிரியர் முனைவர் மா.நன்னன் அவர்களின் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டு அன்னாரின் துணைவி யார் திருமதி ந.பார்வதி அம்மாள் அவர்களிடம் நூலுரிமைத் தொகை யான ரூ.10 இலட்சத்திற்கான காசோலையினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.08.2023) தலைமைச் செயல கத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் பேராசி ரியர் மா.நன்னன் அவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவரின் துணைவியார் திருமதி ந.பார்வதி அம் மாள் அவர்களிடம் நூலுரிமை பரிவுத் தொகையான 10 இலட்சம் ரூபாய்க் கான காசோலையை வழங்கினார்.

தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையா கக் கொண்டு அவர்தம் மரபுரிமையர் களுக்கு நூலுரிமைத் தொகை வழங் கப்பட்டு வருகிறது. இதுவரை 173 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடை மையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமை யர்களுக்கு ரூபாய் 13.87 கோடி நூலு ரிமைத் தொகை அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாளி லிருந்து இது நாள்வரை சிலம்பொலி சு.செல்லப்பன், முனைவர் தொ.பரமசிவன், புலவர் இளங்குமரனார், முருகேச பாகவதர், சங்கரவள்ளி நாயகம், புலவர் செ.இராசு, பேராசிரியர் க.அன்பழகன், முனைவர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், நெல்லை செ.திவான், விடுதலை இராஜேந்திரன், நா.மம்மது, நெல்லை கண்ணன்,**

**கந்தர்வன் என்கிற நாகலிங்கம், சோமலே, முனைவர் ந.இராசையா, தஞ்சை பிரகாஷ் ஆகிய 16 தமிழறிஞர் களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப் பட்டு 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் நூலுரிமைத் தொகையாக வழங்கப் பட்டுள்ளது.**

**முதலமைச்சர் அவர்கள் 30.7.2023 அன்று சென்னை, சர்.பிட்டி தியாக ராயர் கலை மன்றத்தில் நடைபெற்ற பேராசிரியர் மா.நன்னன் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவில், நன்னன் அவருடைய நூற்றாண்டைக் கொண்டா டும் இந்த நேரத்தில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் இருக்கின்ற காரணத்தால், அந்தப் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன், தமிழ்நாடு அரசு சார்பில் நன்னன் அவர்களுக்கு புகழ் சேர்கிற வகையில் நன்னன் அவர் களின் புத்தகங்கள் நாட்டுடைமை ஆக்கப்படும் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நன்னன் அவர் களின் குடும்பத்தினரோ, உறவினர் களோ, வேறு யாரும் கோரிக்கை களை இந்த நேரத்தில் வைக்கவில்லை. யாரும் வைக்காமல் இந்த கோரிக் கையை நான் அறிவிக்கிறேன் என்று சொன்னால், நன்னன் குடியில் நானும் ஒருவன் என்ற அடிப்படையில், இந்த அறிவிப்பை செய்திருக்கிறேன்”** என்று தெரிவித்தார்.

அதற்கிணங்க, பேராசிரியர் முனை வர் மா.நன்னன் அவர்கள் எழுதிய நூல்கள், கருத்துக் கருவூலங்கள் உலக மக்களை எளிதில் சென்றடை யும் வகையில் அவரின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப் பட்டு, அவரது துணைவியார் திருமதி ந. பார்வதி அம்மாள் அவர்களுக்கு நூலுரிமை பரிவுத் தொகையான 10 இலட்சம் ரூபாய்க்கான காசோ லையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் வழங்கி, சிறப்பித்தார்.

இந்நிகழ்வின்போது, பேராசிரியர் முனைவர் மா. நன்னன் அவர்களின் மகள் திருமதி அவ்வை அவர்கள், முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து வாசித்த கவிதை:

**முதலமைச்சரவர்களுக்கு**
**உள்ளார்ந்த நன்றி!**

நன்னனுக்கு நூற்றாண்டு நிறைவு
நிறை வாழ்வு வாழ்ந்த நன்னனுக்கு
நான் வந்து வாழ்த்துகிறேன் என்று
நிறைவான விழாவாக்கிய முதல்வரே

திராவிட உறவைச் சுட்டி பின்
தொடரும் உறவைச் சொல்லி எம்
தந்தையின் சிறப்பெல்லாம் அன்புடனே
தொடர்ந்து பேசிய சீர்மிகு செம்மலே

எழுதிய விரலுக்குக் கணையாழி அன்று
எழுத்துகளுக்கு நாட்டுடைமை
ஆணை இன்று
எங்கும் பரவிப் பயன் விளைக்கும் என்று
எல்லார்க்கும் என்றே நிலைத்தது நன்று

நற்றமிழை என்றுமுளத் தமிழாகக்
காக்க
நல்வழிகாட்டும் பெரியாரின்
பெருநெறியை
நன்னன் முறையை நானிலத்
துளோரெலாம்
நன்கு பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்திட

நாட்டின் உடமையாய் நானிலத்தின்
உடமையாய்
நூல்களை நன்னன் நூல்களை
ஆக்கினீர்
நாடி வந்து கோராத போதும் தேடி வந்து
நற்செயல் புரிந்த மாண்பைப் போற்று
கிறோம்

நன்னன் குடியினர் நன்றி உணர்கிறோம்!
நீவிர் நீடு வாழ்க எழு ஞாயிறாய்
வாழ்க!
நல்லாட்சித் தொடர நல்லோர் வாழ!
நலமுடன் நீவிர் நீடு வாழ்க வாழ்க!

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செய லாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செய லாளர் மரு. இரா.செல்வராஜ், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை அருள், பேராசிரியர் முனை வர் மா.நன்னன் அவர்களின் மகள் கள் திருமதி வேண்மாள், திருமதி அவ்வை மற்றும் குடும்பத் தினர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.08.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் பேராசிரியர் முனைவர் மா.நன்னன் அவர்களின் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவரின் துணைவியார் திருமதி ந.பார்வதி அம்மாள் அவர்களிடம் நூலுரிமை பரிவுத் தொகையான 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை அருள், பேராசிரியர் முனைவர் மா.நன்னன் அவர்களின் மகள்கள் திருமதி வேண்மாள், திருமதி அவ்வை மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

## நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும்

# 'திராவிடப் பள்ளி' தொய்வின்றித் தொடர வாழ்த்துகிறேன்!

## வலைதளப் பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஆக. 16-

கழகத் தலைவர் மு.க.ஸ்டா லின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் அவர்கள் முன்னின்று நடத்தும் 'திராவிடப் பள்ளி' நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைக் கிறது.




இதையொட்டி அப்பள்ளியை வாழ்த்தி வலைதளப் பதிவிட்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "திராவிடப் பள்ளி தொய்வின்றித் தன் பணியைத் தொடர வாழ்த்துகிறேன்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**இளைய தலைமுறையின ருக்கு திராவிட இயக்கத்தின் வரலாறு, உழைப்பு, தியாகம், போராட்டங்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைகள் ஆகியவற்றை எளிய முறையில் பயிற்றுவிக்கத் தொடங்கப்பட்டு, நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் 'திராவிடப் பள்ளி' தொய்வின்றித் தன் பணியைத் தொடர வாழ்த்துகிறேன்.**

**கழகத்தில் உள்ள பல்வேறு அமைப்பினரும் திராவிடப் பள்ளியில் சேர்ந்து, கொள்கைப் பயிற்சி பெறுக!**

இவ்வாறு அப்பதிவில் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




# திராவிடப் போராளிகள்

30 ■ வழக்கறிஞர் அருள்மொழி

மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

ஓவியம் : ரவி பேலட்



## பகுத்தறிவு பரப்பிய விசாலாட்சி!

*1932-ஆம் ஆண்டில் தமிழ்நாடு எப்படி இருந்தது? அதிலும் சடங்கு சாஸ்திரங்களில் மூழ்கிப்போன செட்டிநாட்டுப் பகுதி எப்படி இருந்திருக்கும்?*

பெண்கள் ஆண்களுக்குச் சமமாகச் சபையில் உட்காரக் கூடாது, செருப்புப் போடக்கூடாது, குடை பிடித்துக் கொண்டு தெருவில் நடக்கக்கூடாது. அந்த காலகட்டத்தில் ஒரு பெண் இதையெல்லாம் செய்ததோடு கணவருடன் சேர்ந்து ‘சுனா மனா’ என்றழைக்கப்பட்ட சுயமரியாதைக் கூட்டங்களுக்குப் போனார்.

அதுமட்டுமா... ஒரு விதவை, மறுமணத்துக்குத் தலைமைதாங்கிப் பேசியிருக்கிறார். இந்தச் செய்தி 1932-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் **‘குடிஅரசு’** ஏட்டில் விரிவாக வெளியானது. அந்த அம்மையாரின் உரையும் முழுமையாக வெளியிடப்பட்டது. செட்டிநாட்டு மக்களின் வியப்பையும் கோபத்தையும் அதன் விளைவுகளையும் அஞ்சாமல் எதிர்கொண்ட அந்தப் போராளியின் பெயர் விசாலாட்சி.

### விதவா விவாகம் பெண்களுக்கு மட்டுமா?

29.11.1932 அன்று கோவை தோழர் ஜானோஜிராவ் - தஞ்சாவூர் தோழர் டி.ஆர்.மஞ்சுளாபாய் இருவருக்கும் திருமணம் நடந்தது. இந்த ஏற்பாட்டைச் செய்தவர்கள் தமிழ்நாட்டுப் புரோகித மறுப்புச் சங்கத்தின் பொறுப்பாளர்கள்.

மணவிழாவுக்குத் தலைமை ஏற்ற காரைக்குடி விசாலாட்சி அம்மையார் தன் உரையில்,

“இன்று இங்கு நடைபெறும் இத்திருமணத்தின் தம்பதிகள் இருவரும் முன்னர் ஓர்முறை திருமணமாகி தம்தம் துணைவர்களை இழந்து, மீண்டும் இதுகாலை மணம் செய்பவர்களாகும். இம்மாதிரி மணங்களை **‘விதவா விவாகம்’** என்று வழக்கத்தில் கூறப்படுவதை நீங்கள் அறிவீர்கள்... ஆனால், அதே மாதிரி ஒரு ஆண் தன் மனைவியை இழந்து மணஞ்செய்யுங்காலை அந்த மணத்தை விதவா விவாகமென்று யாரும் சொல்வதில்லை” என்று தொடங்கிய விசாலாட்சி அம்மையார் விதவைக் கொடுமைக்கு என்னவெல்லாம் காரணமாக இருக்கிறது என்று எடுத்துக்காட்டுகிறார்.

“ஒரு கணவனை இழந்த பெண், மீண்டும் ஒரு கணவனை மணஞ்செய்ய விரும்பும்பொழுது அவளுடைய பெற்றோர்கள் ‘நமது சாதி வழக்க மல்ல; ஆதலால் செய்யக்கூடாது’ என்று சொல்லி விடுகிறார்கள். வைதீகர்கள் ‘இது மதச் சம்பிர தாயத்திற்கு விரோதம்’ என்று சொல்லி ஓலம் இடுகிறார்கள். பந்துக்கள் தங்களுடைய சமூகத்துக்கு மரியாதை தொலைந்து போய்விடுமென எண்ணி, உயிர்விட்டுவிடுபவர்கள் போல் தடுக்கிறார்கள். திண்ணை வேதாந்த சோம்பேறிகள், ‘காலம் கலிகாலம். இதனால்தான் மழை சரிவரப் பெய்யவில்லை’ என்று பிதற்றுகிறார்கள். இவ்வளவு கஷ்டங்களைத் தாண்டினாலும், நாலு பெண்ஜாதியை சாகக்குடுத்த ஆணும்கூட ‘நான் விதவையைக் கட்டிக்கொள்ள மாட்டேன்’ என்று சொல்லிவிடுகிறான்.

...இந்நிலையில் உள்ள மக்களையுடைய தேசம் ‘புண்ணிய பூமி’ என்றும் ‘தர்மதேசம்’ என்றும், உலகிற்கு நாகரீகம் படிப்பித்த ‘ஞானதேசம்’ என்றும் சொல்லுவது ‘ராமராஜ்ஜியத்தை’ ‘நீதி ராஜ்யம்’ என்று சொல்லுவதையே ஒக்கும்.”

### இயக்கம் வளர்த்த சுயமரியாதை இணையர்

திராவிட இயக்கத்தின் வரலாற்றில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய மூன்று தலைவர்கள் மனத்திலும் தன் பண்பாலும், கொள்கை உறுதியாலும் தனியிடம் பிடித்த திராவிட இயக்கத் தொண்டர் காரைக்குடி இராம சுப்பையா அவர்களின் மனைவிதான் இத்தகைய புரட்சிகரமான கருத்துகளை மேடையில் முழங்கிய விசாலாட்சி அம்மையார்.

**ஆண்டுதோறும் பின்பற்றும் வழக்கங்களில் ஒன்று ‘பிராமண போஜனம்’ அந்தச் சடங்கு நடத்தக்கூடாது என்று எதிர்த்து நின்றார் இராமசுப்பையா.**

விசாலாட்சி அம்மையாருக்கு அவரது திருமணத்துக்கு முன்னால் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி எதுவும் தெரியாது. கணவர் வழி நடக்க வேண்டும் என்ற பழக்கத்தில்தான் தன் கணவருடன் இணைந்து தந்தை பெரியாரின் கூட்டங்களுக்குச் சென்றார். அறிவுள்ள பெண்கள் பகுத்தறிவுக் கருத்துகளைப் புரிந்து கொண்டால், அதனை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கும் கடத்திவிடும் ஆற்றல் பெற்றவர்கள் என்பதற்கு, விசாலாட்சி அம்மையாரின் வாழ்க்கையே சான்று.

சுயமரியாதை இயக்கம், தமிழர் வாழ்வில் வேர் பிடித்து நின்றதற்கான முதன்மையான காரணம் குடும்பம் குடும்பமாகக் கொள்கைக் கூட்டங்களில் பங்கேற்றதுதான். அத்தகைய கொள்கை இணையர்களான சாமி சிதம்பரனார் - சிவகாமி, புதுக்கோட்டை சின்னையா - பொன்னழகு, குருசாமி - குஞ்சிதம், மரகதவல்லி - முருகப்பா, சிதம்பரம் - ரெங்கம்மாள் என்று சாதி வேறுபாடுகளை ஒழித்து, கொள்கை உறவுகளோடு அன்பு கொண்டு வாழ்ந்தவர்களில் விசாலாட்சி - இராமசுப்பையா இணையருக்குச் சிறப்பிடம் உண்டு.

நிறைய சம்பாதிக்க வேண்டும், பிள்ளைகளுக்காக வேணும் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும் என்று கணவரைத் தூண்டுவதே பெண்களின் கடமை என்ற பின்னணியில் வளர்ந்த விசாலாட்சி அம்மையார், சுயமரியாதைக் கொள்கைக்காக கணவருடன் இணைந்து நடத்திய வாழ்க்கைப் போராட்டம் நமது சமூகத்தின் சாதிக் கட்டுமானம் பற்றிய பல செய்திகளைக் கொண்டுள்ளது.

### நஞ்சு வைத்த உறவுகள்

கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த இராமசுப்பையா அவர்களின் குடும்பத்தினர் பழமையில் ஊறியவர்கள். பார்ப்பனர் முன்நிற்கும் சடங்குகளைச் செய்வதைக் குடும்பத்தின் பெருமையாக நினைத்தவர்கள். அவர்கள் ஆண்டுதோறும் பின்பற்றும் வழக்கங்களில் ஒன்று **‘பிராமண போஜனம்’** அந்தச் சடங்கு நடத்தக்கூடாது என்று எதிர்த்து நின்றார் இராமசுப்பையா.

வீட்டுக்குள் பார்ப்பனர்கள் உட்பட வெளியாட்கள் யாரும் வரக்கூடாது என்று தடை வாங்கிவிட்டார்.

வீட்டில் இருந்தால், பிரச்சினை முற்றும் என்று கணவரும் மனைவியும் மகனும் உதவிப் பணி செய்யும் சிறு பெண்ணும் பகல் முழுவதும் வெளியில் போய்விட்டு, இரவு வீடு திரும்பி சோர்வுடன் உணவு சாப்பி டாமல் படுத்து விட்டார்கள்.

மறுநாள் காலை எழுந்து பார்த்தபோதுதான் உணவில் நஞ்சு கலக்கப்பட்டது தெரியவந்தது. எப்போது நினைத்தாலும் மனம் நடுங்கும் இக்கொடுமைக்குப் பின்னும் விசாலாட்சி அம்மையார் மனம் கலங்கவில்லை..!

(வருவார்கள்...)

---

## ஆட்டம் காண வைக்கும் ஆய்வு!

‘2019-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளில், பா.ஜ.க.வின் கைங்கர்யம் இருக்கலாம்!’ - ஆய்வாளர் சப்யா சாச்சி தாஸ், மேற்கொண்டு வரும் தொடர் ஆய்வின் சாராம்சம் இதுதான். இந்திய கல்விப் புலத்தில், தேர்தல் ஆய்வுத் தளத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் புரட்சிகரமான ஆய்வு இது, என்று தேர்தல் நிபுணர்கள் பலர் பாராட்டுகின்றனர்.

அசோகா பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத் துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வருபவர் சப்யா சாச்சி தாஸ். அவர் 2019 -ஆம் ஆண்டு தேர்தலில் பா.ஜ.க. வென்ற 59 தொகுதிகளை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு ’அந்தத் தேர்தல் முடிவுகளின் போது பா.ஜ.க. தனது மோடி மஸ்தான் வேலைகளைச் செய்திருக்குமா?’ என்ற கோணத்தில் ஆராய்ந்தார்.

குறிப்பிட்ட அந்த 59 தொகுதிகளை அவர் ஆய்வுக்குத் தேர்வு செய்த காரணம், அங்கெல்லாம் இரண்டாம் இடம் பிடித்த கட்சிக்கும் பா.ஜ.க.வும் இடையிலான வெற்றி வித்தியாசங்கள் வெறும் 5 சதவிகிதம் என்ற அளவில் இருந்ததுதான்.

ஆய்வுத் துறையில் **‘வொர்க்கிங் பேப்பர்’** என்ற ஒன்று உண்டு. அதாவது, ஆய்வு ஒன்றை மேற்கொண்டிருக்கும் போது, முழுமையான முடிவுகள் தெரிவதற்கு முன்பு சில அதிர்ச்சிகரமான, சுவாரஸ்யமான போக்குகள் தெரிய வரும். அவற்றை ஒரு கட்டுரையாக எழுதி, தாங்கள் பணியாற்றும் நிறுவன தளத்தில் வெளியிடுவார்கள். அதை யார் வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அப்படி தாஸ் வெளியிட்ட கட்டுரையில் இருந்த போக்குகள் கடந்த சில நாட்களாக, பா.ஜ.க.வை ஆட்டம் காண வைத்துள்ளன. ஏனென்றால், அந்த 59 தொகுதிகளில் வாக்குப் பதிவின் போது பல இஸ்லாமியர்களின் பெயர்கள் விடுபட்டிருந்தன. வாக்குப்பதிவு நாளில் சொல்லப்பட்ட வாக்களிப்பு சதவிகிதத்துக்கும், தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட போது சொல்லப்பட்ட வாக்கு சதவிகிதத்துக்கும் இடையில் நிறைய வேறுபாடுகள் இருந்தன. மேலும் அந்த 59 தொகுதிகளும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் இருப்பவை என்பது குறிப்பிடத்தக்கது. இது போன்ற பல தரவுகளை வைத்துத்தான் தாஸ் இந்த ஆய்வை மேற்கொண்டு வருகிறார்.

ஆனால், அவரது ஆய்வு தொடர்பான தகவல்கள் வெளிவந்த நாளிலிருந்து பா.ஜ.க. தனது வேலையைக் காட்ட ஆரம்பித்துவிட்டது. முதலில் தங்களுக்கும் இந்த ஆய்வுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று அசோகா பல்கலைக்கழகம் விலக, தற்போது தாஸ் தனது பணியை ராஜினாமா செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவரது ஆய்வு முழுமையாக முடியும் நாளில், பா.ஜ.க.வின் சித்து விளையாட்டுக்கள் வெளியே வரும்.

---

## :ப்ளாஷ்பேக்





சுரேந்திரன்

### வெற்றிப் பிரச்சாரம்!

1989-ஆம் ஆண்டு சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி தொகுதி வேட்பாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அவர்களை ஆதரித்து, மல்லூரில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்துக்கு அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள் வருகை தந்தார்கள். அவருடன் சேலத்துச் சிங்கம் வீரபாண்டியார் அவர்களும் உடன் வந்திருந்தார். வேட்பாளரை ஆதரித்து, தளபதி மேற்கொண்ட பிரச்சாரம் அனைவரையும் ஈர்த்தது. தேர்தலில் வெற்றியையும் தேடித் தந்தது. மூன்றாவது முறையாக தலைவர் கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அந்தக் கூட்டத்தில் மாண்புமிகு தளபதியார் அவர்களை பனமரத்துப்பட்டி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக நான் வரவேற்று சால்வை அணிவித்தேன்.

**-என்.சுரேந்திரன், மல்லூர் பேரூர் கழகப் முன்னாள் பொறுப்பாளர், பனமரத்துப்பட்டி ஒன்றியம், சேலம் கிழக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473

---


## கருவூலம்

### கொஞ்சும் தமிழ்

**1977-ஆம் ஆண்டு, ஜூலை மாதம் சென்னை பனகல் பூங்கா அருகே, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 75-வது பிறந்த நாள் விழாவினை நடத்தினார் கவிஞர் கண்ணதாசன். அந்தக் கூட்டத்தில் சிறப்புரையாற்ற கலைஞரை அழைத்திருந்தார். கவிஞர் கண்ணதாசன் அடிக்கடி கலைஞரைத் தாக்கி எழுதுவதும், பின்னர் பாராட்டி எழுதுவதும் வாடிக்கையாக இருந்தது. எனினும் கூட்டத்துக்குச் சென்ற கலைஞர், “கவிஞர் என்னைத் தாக்கினாலும், தாங்கினாலும் அதிலே தமிழ் கொஞ்சுகிற காரணத்தால் எனக்கு மனம் புண்பட்டதில்லை” எனக் கவிஞரைப் போற்றினார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 211




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131